தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 132 சுபகிருது வருடம், மார்கழி மாதம் 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை (23.12.2022) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் அவ்வல் - 28, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.60

கமெண்ட் கந்தர்...

சுதந்திர தினத்துக்கு முன்னர் தமிழருக்குத் தீர்வு கிடைக்க சிங்கள அடிப்படைவாதிகள் விட்டு விடுவார்களா..?

உஷ்

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவரை அந்தப் பதவியிலிருந்து நீக்க மறைமுக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வில் இதற்கான சமர்ப்பணம் முன்வைக்கப்படவுள்ளதாம்.

"அந்த ஆணைக்குழுவை நிறுவ நடவடிக்கை எடுத்த எனக்கு அதன் தலைவரை எப்படி அனுப்புவது என்பதும் தெரியும்" என்று இந்த விடயம் பற்றி பேசப்பட்டபோது கடுந்தொனியில் சொன்னாராம் ரணில்.

பொங்கலுக்கு முன்பு தீர்வுக்கான இணக்கம்!

ஜனவரி 10,11,12,13ஆம் திகதிகளில் தொடர் பேச்சுக்கு ரணில் - தமிழர் தரப்பு முடிவு

(நமது நிருபர்)

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான தீர்மானங்களை வரும் தைப்பொங்கல் தினத்திற்கு முன்னர் இறுதி செய்து கொள்வது என தமிழர் தரப்புக்கும் ஜனாதிபதி தலைமையிலான அரச தரப்புக்கும் இடையில் நேற்று முன்தினம் நடந்த பேச்சுக்களில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக எதிர்வரும் 10,11,12, 13 ஆம் திகதிகளில் தொடர்ந்து நான்கு நாட்கள் பேச்சுகளை நடத்தித் தீர்வுக்கான தீர்மானங்களை எட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை 6.15 மணி முதல் 7 மணிவரை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இது தொடர்பான கூட்டத்தில் அரச தரப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் சட்டமா அதிபர் சஞ்ச ராஜரத்தினம் ஆகியோர் பங்கு பற்றினர்.

தமிழர் தரப்பில்...

02 பக்கம்

திங்கள் அரச விடுமுறை

(கே.சுபானி)

எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை விசேட அரச விடுமுறை தினமாக அறிக்கப் பட்டுள்ளது. பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நேற்று (22) இந்த அறிவித்தலை விடுத்தது.

எதிர்வரும் ஞாயிறுக்கிழமை நத்தார் பண்டிகையை முன்னிட்டு, மறுநாள் திங்கட்கிழமை விசேட அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்புப் பங்குச்சந்தையும் திங்கட்கிழமை மூடப்படுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

வெளிநாட்டு அகதிகள் 912 பேர் உள்நாட்டில்

வெளிநாட்டுப் பிரஜைகள் 912 பேர் பல்வேறு காரணங்களுக்காக இலங்கையில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளதாக குடிவரவு – குடியகல்வு திணைக்களத்தின் 2021ஆம் ஆண்டின் செயற்திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது. இலங்கையில் தஞ்சமடைந்து அகதிகளாகவுள்ள வெளிநாட்டினில் அதிக எண்ணிக்கையானோர் ...

02 பக்கம்

நத்தாரை சந்தோஷமாக கொண்டாட முடியாத நிலை

பேராயர் மெல்கம் கவலை

(கே.சுபானி)

ஆட்சியாளர்களின் மோசமான நடவடிக்கையால் நாடு நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. நாட்டு மக்கள் பட்டினியில் வாடும்போது இவ்வருட நத்தாரை சந்தோஷமாகக் கொண்டாட முடியாதென பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நத்தார் இசை நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் 6.1 மில்லியன் மக்கள் ஒருவேளை உணவை உண்ணாது பட்டினியில் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. நாடு இவ்வாறான அழிவை சந்தித்துள்ள நிலையில் நாம் இவ்வருட நத்தாரை...

02 பக்கம்

பெருந்தோட்ட நிறுவனங்களுக்கான காணி அனுமதிப்பத்திரம் இரத்து

மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி ரணில் நுவரெலியாவில் அறிவிப்பு

(நமது நிருபர்)

பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து காணிகளுக் குமான அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்து மக்களுக்கு அவசியமான காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இந்தப் பணிகளை எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்ய எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நுவரெலியாவில் நேற்று (22) தெரிவித்தார்.

நுவரெலிய மாவட்ட செயலக அலுவலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அரச அதிகாரிகள் பொதுமக்களுக்கு சேவையாற்றும்போது இழுத்தடிப் பின்றி தமது பொறுப்புகளை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டு மென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

தனக்கு முன்வைக்கப்பட்டுள்ள பொதுமக்கள் பிரச்சினையில் 50 சதவீதமானவை அரச அதிகாரிகளால்...

02 பக்கம்

21 மெற்றிக் தொன் அரிசி ஏக்கலையில் கைப்பற்றல்

கால்நடை தீவனத்துக்கு களஞ்சியப்படுத்தியதாக தகவல்

(ம. சசிகலா)

கால்நடை தீவனமாக பயன்படுத்த வைத்திருந்த மனித பாவனைக்கு ஏற்ற 21 மெற்றிக் தொன் அரிசி ஏக்கலை பிரதேசத் திலுள்ள களஞ்சியசாலை ஒன்றிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக நுகர்வோர் சேவை அதிகாரசபையின் கம்பஹா மாவட்ட புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நுகர்வோர் அதிகார சபையின் அவசர அழைப்புப் பிரிவுக்கு கிடைத்த முறைப்பாட்டை யடுத்து குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையில் களஞ்சியசாலை முகாமையாளருடன் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேக நபர்கள் இருவரையும் வத்தளை நீதவான் நீதிமன்றத்தில் ஜன வரி மாதம் 6ஆம் திகதி-ஆஜராகுமாறு தெரிவித்து நிபந்தனையுடன் பிணையில் விடுவித் துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட அரிசியின் பெறுமதி சுமார் 39 இலட்சம் ரூபா எனவும் பொலன்னறுவையில்...

02 பக்கம்

ஜனவரி முதல் மின் கட்டணம் குறுஞ்செய்தியில்

(கே.சுபானி)

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அச்சிடப் பட்ட மின் கட்டணப் பட்டியலுக்கு பதிலாக தொலைபேசி குறுஞ்செய்தியூடாக (SMS) மின் கட்டணம் அறிவிக்கப்படும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜே சேகர தெரிவித்துள்ளார்.

மேலும், மின்சார சபையின் கணினி கட்டமைப்புகள்...

02 பக்கம்

கொரிய அதிகாரியால் அமைச்சருக்கு 'டோஸ்'

கூட்டத்துக்கு தாமதமாக வந்ததால் ஆவேசம்

கொழும்பில் திட்டமிடப்பட்ட கூட்ட மொன்றிற்கு 30 நிமிடங்கள் தாமதமாக வந்த சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பால்குவல் மற்றும் அவரது அதிகாரிகளை தென் கொரிய பேரிட் நிவாரண அறக்கட் டளையின் தலைவர் சோ சுங் லியா கடு மையாக கண்டித்துள்ளார்.

இவர்களைப் போன்ற ...

02 பக்கம்

கல்முனை கடற்கரைப் பள்ளி 201ஆவது கொடியேற்ற விழாவுக்கு ஏற்பாடுகள் மும்முரம்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹாவின் 201ஆவது வருடாந்த கொடியேற்ற விழாவுக்கான ஏற்பாடுகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ள 201ஆவது கொடியேற்ற விழாவை சிறப்பாக நடத்துவதற்கு பள்ளிவாசல்...

02 பக்கம்

தேர்தலுக்குத் தயாராகிறது ஆணைக்குழு

25 மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்கள் வர்த்தமானியில்

(ம.சசிகலா)

உள்ளாட்சித் தேர்தல் நடத்துவதற்காக அனைத்து நிர்வாக மாவட்டங்களுக்கும் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களை தேசிய தேர்தல் ஆணைக்குழு நியமித்துள்ளது.

உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 4(1) பிரிவின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட் டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி ஆணைக் குழு நியமனங்களைச் செய்துள்ளது.

அதன்படி, டிசம்பர் 21ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவினால் விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வர்த்தமானியின் பிரகாரம் அந்தந்த மாவட்ட செயலாளர்கள் அல்லது அரசாங்க முகவர்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நிய மிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, பிரதி ஆணையாளர்கள் அல்லது உதவி தேர்தல் ஆணையாளர்கள் அந்தந்த மாவட்டங்களின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக...

02 பக்கம்

சுற்றாடலுக்கான அனுமதி பெறாமல் 98 டிப்போக்கள்

(ம.சசிகலா)

இலங்கை போக்குவரத்து சபையின் 98 பஸ் டிப்போக்களுக்கு சுற்றாடல் அனுமதி இல்லையென தேசிய கணக்காய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கை போக்குவரத்து சபையின் 107 டிப்போக்களில் 09 டிப்போக்கள் மாத்திரமே சுற்றாடல் அனுமதியைப் பெற்றுள்ளதாக தேசிய கணக்காய்வுத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகன சேவை நடவடிக்கைகளும் டிப்போ மூலம் மேற்கொள் ளப்படுவதால், தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின்படி அதற்கான உரிமம் பெறப்பட வேண்டும். ஆயினும், அவ்வாறான அனுமதி பெறப்படாமல் 98 பஸ் டிப்போக்கள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கை போக்குவரத்து சபை 2017ஆம் ஆண்டு புதிய பஸ்களுக்கு...

02 பக்கம்

அமைச்சர் காஞ்சனவின் கருத்துக்கு பொறியியலாளர்கள் கடும் எதிர்ப்பு

அனுபவம் குறைவெனவும் சுட்டிக்காட்டு

(நா. தினுஷா)

மின்சார பொறியியல் துறையில் நான் கற்றுக்கொண்ட விடயங்களை உரிய நேரத்தில் முறையாக பயன்படுத்தவில்லையென்றால் இந்தத் தொழில் இருந்து பயனில்லை. மின்சார சபையின் பொறியிலாளர் என்ற அடிப்படையில் எங்களால் முன்னெடுக்கப்படும் கடமைகளை அரசியல்வாதிகளால் முன்னெடுக்க முடியாது. எங்களின் கடமையை நாங்கள் செய்யும்போது எங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அமைச்சர் முனைகிறார் என்றால், அவருக்கு இந்த விடயத்தில் எந்தளவு அனுபவம் இருக்கிறது என்பது புரியவில்லை - என்று மின்சார சபையின் பொறியிலாளர் சங்கத் தலைவர் நிஹால் வீரரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் தேடிப்பார்க்க வேண்டியது அமைச்சரின் பொறுப்பாகும். நிலக்கரிக்கான அமசியம் இருக்கிறது என்ற விடயத்தை கடந்த செப்டெம்பர் மாதம்முதல் வலியுறுத்த முயற்சித்து வருகிறேன். அதற்குக் காரணம், 2021- 2022ஆம் ஆண்டுகளுக்காக எங்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட நிலக்கரி தொகையானது செப்டெம்பர் மாதமாகும்போது நிறைவடையும் நிலையில் இருந்தது. அதன் பின்னர் செப்டெம்பர் மாதம்முதல் எதிர்வரும் ஏப்ரல் மாதம்வரையான காலப்பகுதிக்குள் 38 நிலக்கரி கப்பல்களை கொண்டுவர வேண்டியிருந்தது.

இது மிகவும் நடைமுறையில் சாத்தியமற்ற விடயமாகும். இவ்வாறு நிலக்கரியை இறக்குமதி செய்தால் பல்வேறு பிரச்சினைகளை சந்திக்கவேண்டிஏற்படும். எதிர்கால விடயங்களை தெளிவாகக் குறிப்பிட முடியாது. எனவே, முடிந்தளவு விரைவாக 38 நிலக்கரி கப்பல்களை நாட்டு வரவழைப்பதற்கான பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. நிலக்கரியை வேறொரு நிறுவனம் கொள்வனவு செய்தால் மாத்திரமே மின் உற்பத்தியை மேற்கொள்ள முடியும்.

மூலப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு இருக்குமாக இருந்தால், அதனைக் கோரும் பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. அதற்கு பொறுப்பும் நாங்களே சொல்லவேண்டும். அவ்வாறு நாங்கள் வெளிப்படுத்தாவிட்டால் நாங்கள் சரியாக குறிப்பிடவில்லை என்று தெரிவித்து எங்கள் மீது குற்றச்சாட்டுகளை முன்வைப்பார்கள். ஆகவே, தேவையான நிலக்கரியை கொண்டுவர சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றே கோருகிறோம்.

இதனை சுமியதற்காக எங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றால், அரசியல்வாதிகளுக்கு எந்தளவுக்கு இந்த விடயத்தில் அரசியல் அனுபவம் இருக்கிறது என்பது புரியவில்லை. நாங்கள் தொழில் நிபுணர்கள். எங்களின் கடமைகளை அவர்களால் செய்ய முடியாது. எனது பேராசிரியர்களே மின்சார பொறியியல் தொடர்பில் கற்பித்தார்கள். அவர்களிடமிருந்து கற்றுக்கொண்ட விடயங்களை உரிய நேரத்தில் பயன்படுத்தாவிட்டால் நான் இந்த தொழில் இருந்து பயனில்லை. நானும் சேவையே செய்கிறேன். இந்த விடயங்களை மக்களுக்கு வெளிப்படுத்தும் பொறுப்பு எனக்கு இருக்கிறது - என்றார்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் 19 தம்பதிகளுக்குத் திருமணம்

(மகேந்திர ரத்தெனிய, த. யுவராஜ்)

யட்டிநுவர தோட்டத்தில் நெகிழ்ச்சியான நிகழ்வு

கண்டி, யட்டிநுவர இலக்கம் 258 குரகம தோட்டத்தைச் சேர்ந்த 19 தம்பதிகள் ஒரே நாளில் குரகம தோட்ட இந்துக் கோவிலில் இந்து முறைப்படி திருமணம் செய்துகொண்டனர்.

இந்தத் திருமணத்தில் கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் உட்பட 16 பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவி பிரதேச செயலாளர்கள் கலந்துகொண்மை விசேட அம்சமாகும்.

இந்த வைபவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை, மகள் ஆகியோரின் திருமணங்கள் நடைபெற்றன.

மறு அறிவித்தல் வரும்வரை கடலுக்குச் செல்லவேண்டாம்

வளிமண்டலவியல் திணைக்களம் மீனவர்களுக்கு எச்சரிக்கை

வங்காள விரிகுடாவில் நிலைகொள்ள குறைந்த தாழமுக்க பகுதி தாழமுக்க வலுவடையவுள்ளதுடன், வங்காள விரிகுடாவின் மத்திய மற்றும் தென்மேற்கு கடல் பிராந்தியங்களில் பலத்த காற்று வீசுவதுடன் இடியுடன் கூடிய மழையும் பெய்யக்கூடும்.

இதனால் மன்னார் தொடக்கம் காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கடற்றொழிலாளர்கள் மறு அறிவித்தல்வரை கடற்றொழிலில் ஈடுபடவேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்த வளிமண்டலவியல் திணைக்களத்தின் சிரேஷ்ட வானிலை அதிகாரி, கலாநிதி மொஹமட் சாலிஹீன் 'தமிழன்' நாளிதழுக்குத் தெரிவிக்கையில்,

வங்கார விரிகுடாவின் தென்மேற்கு கடல் பிரந்தியத்திற்கு மேலாக நிலைகொண்டுள்ள தாழமுக்கப் பிரதேசமானது அடுத்துவரும் தினங்களில் மேலும் தீவிரமடைந்து தாழமுக்கமாக வலுவடையக்கூடும்.

இதன் தாழமுக்கமானது வடமேற்குத் திசையினூடாக நகர்ந்து அடுத்துவரும் சில தினங்களில் இலங்கையின் வடகிழக்குக் கரையை சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வங்கார விரிகுடாவின் தென்மேற்கு கடல் பிரந்தியத்தில் நிலைகொண்டுள்ள தாழமுக்கப் பிரதேச தாக்கத்தின் காரணமாக வங்கார விரிகுடாவின் மத்திய மற்றும் தென்மேற்கு கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 55 - 65 கிலோமீற்றர் வேகத்தில் அடிக்கடி பலத்த காற்று வீசவதுடன், இடியுடன் கூடிய மழையும் பெய்யக்கூடும் எனத் தெரிவித்தார்.

கொரிய அதிகாரியிடம்...

அமைச்சர்களை சந்திப்பதால் எந்த பயனுமில்லையென குறிப்பிட்ட அவர், தென் கொரியாவில் இப்படி நடந்திருந்தால் அந்த அமைச்சர் தண்டிக்கப்பட்டிருப்பார் - என்றார்.

சமூக வலுவூட்டல் அமைச்சில் நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க தென் கொரியா எவ்வாறு உதவ முடியும் என்பது குறித்து ஆராயப்பட்டது.

தென் கொரியா வெறும் 40 ஆண்டுகளில் உலகின் மிகவும் வளர்ந்த பொருளாதாரங்களில் ஒன்றாக மாறியது. பொருளாதார வெற்றியில் முன்னுதாரணமாக உள்ளது.

ஒரு தீட்மிடப்பட்ட கூட்டத்தை 30 நிமிடங்கள் தொடங்குவதற்குத் தாமதமாக வருவது நல்ல அறிகுறி அல்ல. அமைச்சர்கள் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும் சரியான நேரத்தில் செயல்படுவதற்கும் பொறுப்பேற்க வேண்டும்.

இது தென் கொரியாவில் நடந்திருந்தால், அத்தகைய அதிகாரிகள் விசாரிக்கப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

இதுபோன்ற அமைச்சர்களை சந்திப்பதில் எந்த பயனும் இல்லை என்றும் அவர் கூறினார்.

குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு கூட்டம் திட்டமிடப்பட்டால், அது அந்த நேரத்தில் தொடங்க வேண்டும். அத்தகைய அமைச்சர்களால் அதைச் செய்ய முடியாவிட்டால், அத்தகைய நபர்களைச் சந்திப்பதில் எந்த அர்த்தமும் இல்லை என்று லியா காடினார்.

இலங்கையில் பொய் சொல்லும் வாக்குறுதி கொடுப்பதும் சாதாரண விடயமாகிவிட்ட, அது அவர்களின் கலாசாரத்தின் அங்கமாகி விட்டது. ஒரு நாடு என்றவகையில் வெளிநாட்டவரிடமிருந்து இதுபோன்ற விடயங்களைக் கேட்டு மக்கள் வெட்கப்பட வேண்டும். இலங்கையில் உள்ளவர்களால் அந்தப் பழக்கத்தை மாற்ற முடியாவிட்டால் நாடு வெளிநாட்டவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த முடியாது என்று அவர் கூறினார்.

மக்கள் கொடுத்த வாக்குறுதிகளை கடைப்பிடிக்க வேண்டும், நிறைவேற்ற மறக்கக்கூடாது. வாழ்க்கை போனாலும் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அமைச்சர்கள் கூடஅதையே செய்யவேண்டும். இல்லையென்றால் இதுபோன்ற அமைச்சர்களை சந்திப்பதில் அர்த்தமில்லை. மக்கள் பொய் சொல்லக்கூடாது. அவர்களுக்கு நல்ல புரிதல் இருக்க வேண்டும் என்றார்.

எனவே, இலங்கையில் கல்வி முறையிலும் மக்களின் சிந்தனை முறைகளிலும் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று லியா மேலும் கூறினார்.

பொங்கலுக்கு...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் வந்து கொண்டனர்.

அரசியல் கைதிகள் விவகாரம்

பதினான்கு கைதிகள் குற்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் உள்ளனர். எஞ்சியோர் வழக்குகளை எதிர்கொண்டுள்ளனர். அவர்களுக்கு எதிரான வழக்குகளை விரைந்து முடிப்பதற்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று இங்கு தெரிவிக்கப்பட்டது.

தண்டனை தீர்ப்பு பெற்ற 14 பேரில் ஐவரை உடனடியாக மன்னிப்பின் கீழ் விடுவிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. மற்ற ஒன்பது பேரின் விடயங்களிலும் சில நடைமுறை ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டு, அவர்களும் பெரும்பாலும் 4ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டது.

வழக்குகளை எதிர்கொண்டுள்ள அரசியல் கைதிகள் விடயத்தில் நீதிமன்றம் மூலம் அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது

காணிகள் விடுவிப்பு

ஜனாதிபதிக்கும் இராணுவ தரப்புக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற பேச்சுகளை அடுத்து கணிசமான காணிகளை விடுவிப்பதற்கான இணக்கம் இராணுவத் தரப்பினால் வழங்கப்பட்டிருப்பதாக கோடி காட்டப்பட்டது. எனினும், எதிர்வரும் 3ஆம் திகதி நடைபெறவிருக்கும் தேசிய பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் இது சம்பந்தமான அனுமதி பெறப்பட்டு, எதிர்வரும் 5ஆம் திகதி மீண்டும் தமிழர் தரப்பும் அரச தரப்பும் பேசும்போது அது பற்றிய நிலைமை தெளிவுபடுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அரசியலமைப்பு விடயம்

அரசியலமைப்பில் உள்ள அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவது மற்றும் தீர்வுக்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து எதிர்வரும் 10, 11, 12, 13ஆம் திகதிகளில் தொடர்ந்து நான்கு நாட்கள் கூடிப்பேசித் தீர்மானங்களை எடுப்பது என்றும் நேற்று முடிவு செய்யப்பட்டது.

இந்த நான்கு நாட்களிலும் பேசப்பட வேண்டிய விடயங்களின் நிகழ்ச்சி நிரல் குறித்து, எதிர்வரும் 5ஆம் திகதி மீண்டும் கூடும்போது கலந்தாலோசித்து இறுதி செய்வது என்றும் நேற்று தீர்மானிக்கப்பட்டதாக தெரிகிறது.

13ஆவது திருத்தத்தில் கூறப்பட்ட அதிகாரப் பகிர்வு விடயங்களை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதற்கு அதற்குப் பின்னர் கொண்டுவரப்பட்ட எந்தெந்த சட்டங்களில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பது தொடர்பில் விவரமான பட்டியல் ஒன்றை அரச தரப்புக்கு சுமந்திரன் கையளித்தார் எனத் தெரிகிறது. எதிர்வரும் 5ஆம் திகதி கூடி, நாள்கு நாள் கூட்டத்தொடுக்கான நிகழ்ச்சி நிரல் ஒழுங்குபடுத்தும்போது, இந்த விடயமும் அதற்குள் சேர்த்துக்கொள்ளப்படும் எனக் கூறப்பட்டது.

தீர்வுக்கான விடயங்கள் குறித்து பேசுவது ஒரு புறமிருக்க, 13 ஆவது திருத்தத்திலுள்ள காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் ஆகியவற்றை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதற்கான முடிவு உடனடியாக எட்டப்பட வேண்டும் என்ற சம்பந்தனின் வலியுறுத்தல் இந்தக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் அறியவந்தது.

இறுதித் தீர்வுக்கான உடன்பாடுகளை தைப்பொங்கலுக்கு முன்னர் எட்டினால், அதையொட்டிய சில விடயங்கள் தவறப்பட்டிருந்தாலும் அவற்றை எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் இறுதி செய்து, நாட்டில் 75ஆவது சுதந்திர தின சமயத்தில் தீர்வுக்கான இறுதி முடிவுகள் முழுமையாக எட்டப்பட்டிருக்கும் என்று இந்த கூட்டத்தில் நம்பிக்கை வெளியிடப் பட்டது.

ஜனவரி முதல்...

தற்போது புதுப்பிக்கப்பட்டுவரும் நிலையில், நகர்ப்புறங்களை மையப்படுத்தி எதிர்வரும் ஜனவரி மாதம்முதல் மின் கட்டணங்களை குறுஞ்செய்திகளூடாக அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

தேர்தலுக்கு...

பெயரிடப்பட்டுள்ளன.

உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான அறிவிப்பை தேசிய தேர்தல் ஆணைக்குழு அடுத்த வாரம் வெளியிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பெயர் மாற்றம்

நுவரெலியா மாவட்ட அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நல்லதண்ணி சிபத்தகங்குல கிராம உத்தியோகத்தர் பிரிவு 320/B வக்பான தோட்ட முள்ளகாமம் மேற்பிரிவில் வசிக்கும் பிறப்பு சான்றிதழ் இலக்கம் 711 தர்ஷனா என்ற எனது பிறப்பு சான்றிதழில் உள்ள எனது பெயரை போகேதர்ன் தர்ஷனா என்று இன்று முதல் திருத்தம் செய்துள்ளேன் என்பதை இலங்கை இனாநாய சோஷலிசக் குடியரசுக்கும் இலங்கை வாழ் மக்களுக்கும் இத்தால் அறிய தருகிறேன்.

ஒப்பம்.
யோதேந்திரன் தர்ஷனா.

பெருந்தோட்ட...

தீர்த்து வைக்கக்கூடியவையென சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, அப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஜனாதிபதி மட்டுமன்றி அமைச்சர் கூட கொழும்பிலிருந்து வரவேண்டிய அவசியம் இல்லையென்றும் குறிப்பிட்டார். அத்துடன், அரச நிறுவனங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் பொது மக்களுக்கு அதிகபட்ச சேவையை வழங்க அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

நுவரெலிய மாவட்டத்தின் காணிப் பிரச்சினையை தீர்ப்பது தொடர்பில் அனைத்து அரச நிறுவனங்களும் ஒன்றிணைந்து தயாரிக்கும் அறிக்கையை பெப்ரவரி 04ஆம் திகதிக்கு முன்னர் தனக்கு கிடைக்கச் செய்யுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, அந்த அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறினால் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய நடவடிக்கை எடுக்க நேரிடுமென்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, நுவரெலிய மாவட்டத்தின் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், உலக எல்லையை பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகளுக்காக பட்டிபொல தொடக்கம் பொரலந்த வரை கேபல் கார் வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்குமாறும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

நுவரெலிய மக்களின் காணிப் பிரச்சினைக்குத் தூரித தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். இம்மாவட்டத்திலுள்ள அரசுக்குச் சொந்தமான காணி தொடர்பில் மாவட்ட செயலக அலுவலகம், பெருந்தோட்ட அமைச்சு மற்றும் காணிப் பதிவுத் திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து அறிக்கை ஒன்றைத் தயாரித்து எதிர்வரும் ஒரு மாதக் காலப்பகுதிக்குள் அதனை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து காணிகளுக்குமான அனுமதிப் பத்திரங்களை இரத்துச்செய்து மக்களுக்கு அவசியமான காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் பணிகளை எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கின்றோம்.

அதுபோன்றே, தோட்டங்களுக்கு அண்மையிலுள்ள சுகாதார மத்திய நிலையங்களுக்கு தேவையான வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அரச உத்தியோகத்தர்கள் மட்டத்தில் தீர்த்து வைக்கக்கூடிய பிரச்சினைகளை முதலில் தீர்க்க வேண்டும். மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்துக்கு முன்னர் மாவட்டத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் அறிக்கையொன்றை தயார் செய்ய வேண்டும். அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளுடனேயே அதிகாரிகள் மாவட்ட குழுக்கூட்டத்தில் பங்கெடுக்க வேண்டும். இல்லையேல் அரச அதிகாரிகளால் தீர்வு வழங்கக்கூடிய வேலைகளையே ஜனாதிபதியாகிய எனக்கு இங்கு வந்து செய்யவேண்டியிருக்கும்.

அரச அதிகாரியென்ற வகையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரச்சினைக்குரிய தீர்வாக மக்கள் மீது வழக்கு பதிய வேண்டுமென்று இங்கே வந்து கூற வேண்டாம். அதேபோன்று மக்களுக்கும் சுற்றச்சூழலுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் எதையும் அரச அதிகாரிகள் முன்னெடுக்கக்கூடாது.

நுவரெலிய மாவட்டத்தின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு விசேட வேலைத்திட்டங்கள் அவசியம். எனினும், சுற்றாடலைப் பாதிக்கும் வகையில் எதையும் இங்கு முன்னெடுக்கக்கூடாது. இலங்கையிலுள்ள மிக உயர்ந்த இடத்திலேயே ஹோட்டன் சமவெளி உள்ளது. எனவே, இதற்கு பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் எவ்விதி செயற்பாடுகளையும் முன்னெடுத்தல் ஆகாது. ஹோட்டன் சமவெளியை பாதுகாப்பதற்காக நாம் புதிய சட்டங்களை கொண்டுவர எதிர்பார்க்கின்றோம். அதேபோன்று உலகின் எல்லையை பார்வையிடுவதற்காக பட்டிபொல தொடக்கம் பொரலந்த வரையில் கேபல் கார் சேவையை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுப்போம்.

இன்று இங்கு கலந்துரையாடப்பட்ட பிரச்சினைகளின் 50 சதவீதமானவை அதிகாரிகள் மட்டத்தினால் தீர்த்து வைக்கப்படக் கூடியவை. எனினும், அரச உத்தியோகத்தர்களிடம் நீங்கள் உக்ரைன் - ரஷ்யா நாடுகளுக்கிடையிலான யுத்தத்தையோ தான் பணியாற்றுகிறீர்கள். இதுபோன்ற சிறிய பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி மட்டுமல்ல, அமைச்சர் ஒருவர்கூட கொழும்பிலிருந்து செலவு செய்து இங்கு வரவேண்டிய அவசியம் இல்லை. எனவே, அரச அதிகாரிகள் இழுத்தடிப்புச் செய்யாமல் தமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை முறையாக நிறை வேற்ற வேண்டியது கட்டாயமாகும் - என்றார்.

21 மெற்றிக் தொன்...

இருந்து குறித்த அரிசி கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் மாவட்ட புலனாய்வுப் பிரிவின் தலைவர் ரஞ்சித் வீரவர்தன தெரிவித்தார்.

வெளிநாட்டு அகதிகள்...

பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள். நாட்டில் தற்போது 709 பாகிஸ்தானிய அகதிகள் உள்ளனர்.

அத்தோடு, ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த 113 பேர், ஈரானைச் சேர்ந்த 24 பேர், பலஸ்தீனைச் சேர்ந்த 6 பேர், சூடானைச் சேர்ந்த 4 பேர், யேமனைச் சேர்ந்த 15 பேர், மியன்மாரைச் சேர்ந்த 35 பேர், பங்களாதேஷ், எரித்ரியா மற்றும் சோமாலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா ஒருவர் ஆகியோர் இலங்கையில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இலங்கையின் அகதிகள் விவகாரப் பிரிவின் மேற்பார்வையின் கீழ் நாட்டில் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நத்தாரை...

சந்தோஷமாகக் கொண்டாட முடியாது.

ஆட்சியாளர்களின் மோசமான நடவடிக்கைகளால் நாடு இவ்வாறான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. யாகக்களைப் போன்று உலகம் முழுவதும் சென்று உணவுக்காக கையேந்துகின்றனர்.

இயற்கை வளம் பொருந்திய நாட்டில் இருந்துகொண்டு யாசகர்களைப்போன்று உலக நாடுகளில் உணவுக்காக கையேந்துவதற்கு நாம் வெட்கப்பட வேண்டும். இவர்களின் அணுகுமுறைதான் என்ன? மோசமான ஆட்சியாளர்களின் நடவடிக்கையால் நாடு இன்று இவ்வாறான நிலையிலுள்ளது.

நத்தார் என்பது பட்டாசு, உணவு அலங்காரங்களால் ஆனதல்ல. பெற்றுக்கொள்வதில் காட்டிலும் கொடுப்பதே நத்தாரின் சிறப்பம்சம்.

அதனால், உங்கள் பிரதேசத்தில் வாழும் உண்ண உணவின்றி வாடும் வறியோருக்கு கொடுத்து உதவுங்கள். இதனையே இயேசு கிறிஸ்துவும் போதித்துள்ளார். இதனாலேயே அவர் மாட்டுத்தொழுவத்தில் பிறந்தார் - என்றார்.

சுற்றாடலுக்கான...

தேவையான உதிரிப்பாகங்களை பஞ்சிகள வத்தை கடைகளிலிருந்து கொள்வனவு செய்துள் ளதாக கணக்காய்வு விசாரணையின்போது தகவல் வெளியாகியுள்ளது.

கணக்காய்வுத் திணைக்களத்தின் தணிக்கை அறிக்கையின்படி, மத்திய பஸ் அலுவலகத்தில் முறையான கொள்முதல் திட்டம் செயல்படுத்தப் படாதமையினாலேயே இந்த நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை...

நிர்வாகத்தினர் பலவேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறிப்பாக, கொடியேற்ற விழா நடைபெறுகின்ற 12 நாட்களும் தினமக்களுக்கு மின் னொளியூட்டல் மற்றும் பொது வசதிகள் அவங்கார ஏற்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் அனைத்தும் தூரிதமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அரச வர்த்தமானி பத்திரிகை மூலம் தேசிய கலாசார விழாவாக அங்கீகரிக்கப்பட்டுள்ள கல்முனை நாகூர் ஆண்டகை தர்ஹாவின் 201ஆவது வருடாந்த கொடியேற்ற விழா சனிக்கிழமை (24) ஆரம் பிக்கப்பட்டு தொடர்ச்சியாக 12 நாட்கள் இடம்பெறுவள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், கொடி இறக்கும் தினமாகிய ஜனவரி 5ஆம் திகதி வியாழக்கிழமை லுஹர் தொழுகையின் பின்னர் மாபெரும் கந்தூரி அன்னதானமும் வழங்கப்பட்டு மாலை 5 மணியளவில் புனித கொடி இறக்கப் படவுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் இந்து சமுத்திர பிராந்திய பிரிவின் தலைமையதிகாரி புனீத் அகர்வால், டிசம்பர் 19-20ஆம் திகதிகளில் மேற்கொண்ட விஜயத்தின்போது துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகியோரைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் கோபால் பக்லேவும் கலந்துகொண்டார்.

உணவு பாதுகாப்புத் திட்டம் அரசியல் சார்பற்ற விடயம்

அதனை அனைவரும் பொறுப்பேற்கலாம் என்கிறார் அமைச்சர் மஹிந்த அமரவீர

(எஸ்.கணேசன்)

விவசாயிகளுக்குத் தேவையான வசதிகள் செய்துகொடுக்கப்படும். அதேபோல நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி விவசாயத்தில் ஈடுபடுவதற்கான வழிகாட்டல்களும் வழங்கப்படும் - என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நுவரெலியா நகர மண்டபத்தில் நேற்று (22) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற நுவரெலியா மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மாவட்ட அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக அரச அதிகாரிகள் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், "விவசாயத் திணைக்களத்தின்கீழ் உள்ள பயிரிடக்கூடிய இடங்களை உற்பத்திக்கு வழங்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. உரப் பிரச்சினையும் தீர்க்கப்பட்டு வருகின்றது. களைக்கொல்லி உள்ளிட்டவையும் வழங்கப்படும். அதாவது விவசாயிகளுக்குத் தேவையான சகல வசதிகளும் செய்துகொடுக்கப்படும்.

அரிசியில் போன்று மரக்கறி உள்ளிட்ட வற்றிலும் நாம் தன்னிறைவு அடைய வேண்டும்.

உணவு பாதுகாப்பு வேலைத்திட்டம் அரசியல் சார்பற்றது. அதனை அனைவரும் பொறுப்பேற்கலாம்.

அதேவேளை, கால்நடை வளர்ப்பு மற்றும் தேசிய பால் உற்பத்தி சம்பந்தமாகவும் கவனம் செலுத்தப்பட்டு, அவற்றின் அபிவிருத்திக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார்.

கொழும்பு, காலிமுகத்திடலில் உள்ள ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் மிக அற்புதமான வகையில் காய்கறிகளைக் கொண்டு கிறிஸ்மஸ் மரம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. 30 அடி உயரமுள்ள இந்த கிறிஸ்மஸ் மரத்தில் காய்கறி செடிகள் கொண்ட 2,000 தொட்டிகள் உள்ளன. கத்தரிக்காய், பலனை கீரை, கோவா, வெண்டிக்காய், மிளகாய் உள்ளிட்ட பல வகையான தாவரங்களைக்கொண்டு இது உருவாக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள் கிடையாது

சுற்றறிக்கை வெளியானது

அரசாங்க ஊழியர்களுக்கு சேமிக்கப்பட்ட விடுமுறை நாட்களுக்கான கொடுப்பனவு மற்றும் போனஸ் கொடுப்பனவு வழங்கப்படுவது தொடர்பில் சுற்றிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

திறைசேறி செயலாளர் கே.எம்.மஹிந்த சிறிவர்தனவின் கையொப்பத்துடன் இந்த சுற்றறிக்கை நேற்றுமுன்தினம் தினம் (21.12.2022) வெளியிடப்பட்டுள்ளது..

இதன்படி அரச ஊழியர்களுக்கு போனஸ் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குவதை கட்டுப்படுத்தும் மாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.அத்த வகையில் அதிகபட்ச வரம்பு 25, 000 ரூபாவிற்கு உட்பட்ட பணம் செலுத்த முடியும் என கூட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங் களுக்கு போனஸ், கொடுப்பனவுகளை வழங்க வேண்டாம் என திறைசேரி , அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வலகம்பாகு காலத்து வாளை விற்க முயன்றவர்கள் கைது

புதையலில் கிடைத்ததாக தகவல் வெளியானது

மஹியங்கனை காட்டில் புதையலில் எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் தொல்லியல் பெறுமதிமிக்க வாள் ஒன்றை 40 இலட்சம் ரூபாவுக்கு விற்பனைசெய்ய முயற்சித்த இரண்டு பேரை சனல்வெல பம்பகின்ன பிரதேசத்தில் கைதுசெய்துள்ளதாக பாணந்துறை வலான மத்திய மோசடி தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மூன்று வாரங்களுக்கு முன்னர் மஹியங்கனை காட்டில் புதையல் தோண்டி இந்த வாளை எடுத்துள்ளனர்.

வலகம்பாகு மன்னனின் காலத்திற்குரிய தொல்லியல் பெறுமதிமிக்க இந்த வாளை 60 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய தயாராகி வருவதாக மத்திய மோசடி தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து வாளை கொள்வனவு செய்பவர்கள்போல் நடித்து பொலிஸார் இந்த



சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளனர். 60 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட விருந்த வாளை 40 இலட்சம் ரூபாவுக்கு வழங்க சந்தேக நபர்கள் இணங்கியுள்ளனர்.

பேரம் பேசுவதற்காக பொலிஸார் பம்பகின்ன பிரதேசத்திற்கு சந்தேக நபர்களை அழைத்துச் சென்று அவர்களை கைதுசெய்துள்ளனர். சந்தேக நபர்கள் பண்டாரவளை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உணவின்றி, மருந்தின்றி மக்கள் தவிப்பு: ஆட்சியாளர் ஹோட்டல்களில் சுகபோகம்!

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு

நாட்டில் மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும், மருத்துவமனைகளில் போலவே மருந்தகங்களிலும் கூட மருந்துகள் இல்லை என்றும் அவ்வாறு மருந்தின்றி முதியவர்கள், தாய்மார்கள், குழந்தைகள் போன்ற குடிமக்களை எவ்வாறு பாதுகாப்பது என தான் கேள்வி எழுப்புவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பணம் கொடுத்து மருந்து வாங்குவதற்கும் பற்றாக்குறையாக உள்ள சந்தர்ப்பத்தில், மருந்து விலையும் கூடியளவில் உயர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு 39 இலட்சம் ரூபா பெறுமதியான இயந்திரம் வழங்கும் நிகழ்வில் நேற்று (22) காலை கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

ஆட்சியாளர்களுக்கு இது எதுவுமே புரிவதில்லை எனவும், தேவைக்கேற்ப அவர்களுக்கு மருந்து மற்றும் உணவு கிடைப்பதால் சுகபோகங்களை அனுபவிப்பதாகவும், இந்த விடுமுறையில் அமைச்சர்கள் 7 நட்சத்திர ஹோட்டல்களில் பொழுதைக் கழிப்பதாகவும், உடல்நலம் பாதிக்கப்பட்டால் 7 நட்சத்திர மருத்துவமனைகளுக்கு செல்வதாகவும், மக்கள் படும் துன்பங்களை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் "மூச்சு" வேலைத்திட்டத்தின் 54ஆவது கட்டமாகவே இவ்வாறு அன்பளிப்புச் செய்யப்பட்டது. இதற்கு முன்னர் 53 கட்டங்களில் 16,02,66,900 கோடி ரூபா மதிப்பிலான மருத்துவமனை உபகரணங்களை "மூச்சு" திட்டத்தின் மூலம் வழங்க ஐக்கிய மக்கள் சக்தியால் முடிந்துள்ளது.

இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கம், மருத்துவமனை பனிப்பாளர்கள் கூட, முடிந்தவரை பல்வேறு அறுவை சிகிச்சைகளை கட்டுப்படுத்த வேண்டும் என்றும், அதற்குத் தேவையான மயக்க மருந்து கூட கிடைக்காதது உச்சகட்டப் பிரச்சினை எனவும், சுகாதார அமைச்சு ஊழல் மிகுந்ததாக அமைந்துள்ளமையே இதற்குக் காரணம் எனவும், சில விலைமனு கோரல்கள் கூட 11 மாதங்களுக்குப் பிறகு நிறைவேற்றப்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் அறிக்கைகளின் பிரகாரம் மருந்துக்கு மாதத்திற்கு சுமார் 50 மில்லியன் டொலர்கள் செலவாகிய போதிலும், தற்போதைய தலைவர்களால் அந்தத் தொகையைக் கூட பெற்றுக்கொள்ள முடியாது போயுள்ளதாகவும், மருந்துகளில் கூட திருடுவதற்கு அவர்கள் பழகிவிட்டதாகவும், இந்நிலையை ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததும், அவ்வாறான கொலிஸ்காரர்களுக்கும் கூலிப்படையினருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அவ்வாறே, மக்களுக்கு சேவை செய்யும் அதிகாரம் இல்லாவிட்டாலும், நன்கொடையாளர்கள் மூலம் வசதிகள் மற்றும் வளங்களைப் பெறுவதற்கான இயலுமைகள் இருப்பதால், இந்நாட்டிலுள்ள பல்வேறு மருத்துவமனைகளுக்கு பல மில்லியன் கணக்கான மருத்துவப் பொருட்களை வழங்க முடிந்ததாகவும், பல்லாபிரக்கணக்கான மக்கள் இதன்மூலம் குணமடைந்ததைக் காணும்போது மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

பண்டிகைக் காலத்தில் விசேட ரயில் சேவைகள்

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கொழும்பிலிருந்து பதுளைக்கு விசேட ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே தினைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விசேட சேவை இன்று 23ஆம் திகதிமுதல் எதிர்வரும் 27ஆம் திகதிவரை மேற்கொள்ளப்படவுள்ளது.

அந்த வகையில், இன்று 23ஆம் திகதி கொழும்பிலிருந்து பதுளைக்கு பி.ப. 7.20இற்கு விசேட ரயில், 24ஆம் திகதி கொழும்பிலிருந்து பதுளைக்கு மு.ப. 7.10இற்கு விசேட ரயில், 26ஆம் திகதி கொழும்பிலிருந்து பதுளைக்கு மு.ப. 7.10இற்கு விசேட ரயில், 25ஆம் திகதி பதுளையிலிருந்து கொழும்புக்கு மு.ப. 7.30இற்கு விசேட ரயில், 25ஆம் திகதி பதுளையிலிருந்து கொழும்புக்கு பி.ப. 7.30இற்கு விசேட ரயில், 23ஆம் திகதி கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு பி.ப. 9.30இற்கு விசேட ரயில், 26ஆம் திகதி காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்கு அதிகாலை 4.30இற்கு விசேட ரயில் சேவைகள் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் நூற்றாண்டு நிகழ்வு தொடர்பில் அதன் உயர்பீட்ட பிரதிநிதிகளான மௌலவி ஏ.எல்.எம்.கலீல், மௌலவி புர்ஹான் ஆகியோர் உள்ளிட்ட குழுவினர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், கட்சியின் 'தாருஸ் ஸலாம்' தலைமையகத்தில் அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படம்.

ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலய தேசிய பாடசாலையின் ஒளி விழா, வித்தியாலய அதிபர் ந.பத்மானந்தன் தலைமையில் நேற்று (22) பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. பிரதம அதிதிகள் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். இதில் பிரதம அதிதியாக சிலாபம் மறைமாவட்ட கட்டைக்காடு பங்குத்தந்தை அருட்திரு வின்சன் ஜெயராசா கலந்துகொண்டு சிறப்பித்தார். பாடசாலை மாணவர்களினால் வகுப்பறைகள் கிறிஸ்மஸ் மரம், பாலன் கூடு போன்றவற்றினால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கரோல் கீதமும் வகுப்பு ரீதியாக இசைக்கப்பட்டது. இறுதியில் சிறந்ததாக தெரிவுசெய்யப்பட்ட வகுப்பறை அலங்கரிப்புக்கு பரிசுகளும் அதிபரால் வழங்கப்பட்டது. (உடப்பு செய்தியாளர்)

வெற்றி நிச்சயம்

"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னை தொடர்பு கொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, திறமையிருந்தும் வாழ்க்கையில் முன்னேற முடியாமை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, எதிரித்தொல்லை, தீராதநோய், போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, வெளிநாடுசெல்ல, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, கொடுத்த பணம் திரும்பி வர, படிப்பில் மந்தம், விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 48 மணித்தியாலங்களுக்குள் 100% நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொடுப்பேன் என்று உத்தரவாதம் அளிக்கிறேன்.

உலகப் புகழ்பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்தீரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி.

ஸ்ரீமத் சுவாமிஜி–0710192687

ebajb.lk

தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, டிசம்பர் 23ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

நிறைவேறவேண்டும் தமிழர் அபிலாஷை

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து அரசாங்கம் நாடகமாடுகிறது என்று கூறினாலும், அழுதாலும் பிள்ளையை அவளே பெறவேண்டும் என்பதுபோல் சந்தேகங்கள் இருந்தாலும் அரசாங்கத்துடன் பேசித்தான் ஆகவேண்டும் என்ற நிலைமை தமிழர் தரப்புக்கு இருக்கிறது.

75 வருட காலம் இழுபடும் இனப் பிரச்சினைக்கு 75 நாட்களில் தீர்வு காண முயல்வது வெறும் பகல் கனவு என்று பலரும் விமர்சிக்கின்றனர். உண்மைதான். அது சாத்தியமற்ற ஒன்றுதான்.

தீர்வு காண்பதற்கு மாதக் கணக்கு, வருடக் கணக்குத் தேவையில்லை. வாரக் கணக்கு, நாள் கணக்குக் கூட அவசியமல்ல. சரியான தலைமைத்துவங்கள் இருக்குமானால், மணிக்கணக்குக்குள் தீர்வுக்கான இணக்கங்களை கண்டுவிட முடியும்.

காணப்பட்ட இணக்கத்தை நடைமுறைப்படுத்தக் காலம் எடுக்கலாம். அதை ஒட்டிய நடைமுறைச் சிக்கல்களைத் தாண்ட மேலும் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கலாம். அது சகஜம். தவிர்க்க முடியாதது. தீர்வு காண்பது அல்லது அதை தீர்வை அடையாளப்படுத்தி இணக்கம் ஏற்படுத்துவது வேறு. அந்த இணக்கத்தை செயல்படுத்தி, நடைமுறைக்குக் கொண்டு வருவது வேறு. முதலாவதைச் செய்தால்தான் இரண்டாவதை நோக்கி நகர முடியும்.

தமிழர் தரப்போடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய அரசு நடத்தும் சமரசத் திட்டமும் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் தேசியப் பிரச்சனைக்கு தீர்வு காண்பது என்ற ஜனாதிபதி ரணிலின் நம்பிக்கையும் மேற்படி முதலாவது விடயம் சம்பந்தப்பட்டதுதான்.

தீர்வுக்கான இணக்கத்தை, உடன்பாட்டை விரைந்து எட்டுவதுதான் அவரின் தற்போதைய இலக்கு.

அதை எட்டினாலேயே பெரிய பிரளயம் தாண்டிய திருப்தியை நாம் அடைய முடியும்.

அதற்குப் பின்னர் எழக்கூடிய எதிர்ப்புகளை சமாளித்தபடி, காணப்பட்ட இணக்கத்தை, உடன்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும்.

முதலாவது விடயத்தை ஒப்பேற்றி, அதை, வரக்கூடிய 75ஆவது சுதந்திர தினம் போன்ற சர்வதேச தரப்புகள் பங்குபற்றும் நாட்டின் தேசியத் திருவிழா ஒன்றில் வைத்துப் பிரகடனப்படுத்துவது அந்த இணக்கத்தை நோக்கி நகர்வதற்கான நல்ல அடிப்படை தளத்தையும் சர்வதேச ஆதரவையும் தரும். எட்டப்படக் கூடிய இணக்கம் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு, சர்வதேச நாடு அல்லது தரப்பு ஒன்றை இடையில் உறுதி வழங்கக் கொண்டு வருவது பரஸ்பர நம்பிக்கையை வளர்த்து, இந்த முயற்சி மேம்பட வாய்ப்பளிக்கும்.

அது குறித்தும் தமிழர் தரப்பு தந்திரோபாய அடிப்படையில் சிந்தித்து ஒரு முடிவெடுப்பது நல்லது.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரி அதாவது இலங்கை உட்பட பிராந்தியத்தின் விடயங்களை கையாளும் பிரமுகரான புனீத் அகர்வால் இங்குள்ள அரசியல் பிரமுகர்களுடன் பேச்சுகளை நடத்தி இலங்கை அரசின் செயற்பாடுகளை வினவியிருக்கிறார். இதன்மூலம் தமிழர் தீர்வு விடயத்தில் இந்தியாவுக்குள்ள கரிசனையும் வெளிப்படுகிறது. இந்த பின்னணியில் இனப்பிரச்சினை தீர்வுக்கான முயற்சிகள் முன்னோக்கி நகர வேண்டும். தமிழர் அபிலாஷைகளுடன் சாதகமான தீர்வொன்று எட்டப்படவேண்டுமென்பதே எமது அவா.

இன்றைய நாளில்...

- 1947 – பெல் ஆய்வுகூடத்தில் முதலாவது டிரான்சிஸ்டர் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.
- 1954 – முதலாவது மனித சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.
- 1972 – நிக்கராகுவா தலைநகர் மனாகுவாவில் இடம்பெற்ற 6.5 அளவு நிலநடுக்கத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இறந்தனர்.
- 1986 – எங்கும் தரையிறங்காமல் முதன்முதலில் உலகைச் சுற்றி வந்த வொயேஜர் விமானம், டிக் ரூட்டன், ஜீனா யேகர் ஆகிய விமானிகளுடன் கலிபோர்னியாவில் தரையிறங்கியது.
- 1990 – 88% ஸ்லோவீனிய மக்கள் யூகொஸ்லாவியாவில் இருந்து பிரிந்து செல்வதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.
- 2007 – நேபாள இராச்சியம் கலைக்கப்பட்டு குடியரசாக மாறுவதற்கான உடன்பாடு எட்டப்பட்டது. பிரதமர் அரசுத் தலைவரானார்.

நக்கல் நமசிவாயம்

எலெக்சன் வருகுதோ, இல்லையோ எலெக்சனுக்கு தயார் எண்ட மாதிரி ஆளுங்கட்சி ஆக்கள் நல்லா நடிக்கிறாங்கள்..!

கிழக்கிலங்கையில் இன பேதமின்றி கொண்டாடப்படும் கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை விழா

தேசிய ரீதியில் புகழ்பூத்த கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹா ஷரீபின் 201ஆவது கொடியேற்ற விழா நாளை 2022.12.24 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறுவதால் இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

இயற்கை அன்னையின் ஆர்ப்பரிப்போடு மிளிரும் கிழக்கு மாகாணத்தின் தென்முனையில் பரந்து விரிந்து கிடக்கும் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களின் முகவெற்றிலையாக திகழ்வது கல்முனை மாநகரமாகும்.

பொதுவாக முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு நகரத்திற்கும் வரலாறுகளும் பாரம்பரியங்களும் உள்ளன. இதைவிட அப்பிரதேசங்களில் ஏதாவது ஒரு பிரதான வரலாற்றுச் சின்னம் காணப்படும்.

இவ்வாறுதான் கல்முனை மாநகரத்திற்கும் அதில் அமைந்திருக்கும் பள்ளிவாசல்களுக்கும் சிறப்புகளும் மிக நீண்ட சுவாரஸ்யமான வரலாறுகளும் நிறைந்து கிடக்கின்றன. இவ்வாறு கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹா ஷரீப் கல்முனை மாநகர சபை மக்கள் பெற்ற ஒரு மாபெரும் வரலாற்று சின்னமாகும்.

கல்முனை நகரத்தின் கிழக்கே பரந்து விரிந்து கிடக்கும் வங்கக் கடலோரம் இப்பள்ளிவாசல் அமைந்துள்ளதால் இதனை எல்லோரும் கடற்கரைப் பள்ளிவாசல் என்றழைக்கின்றனர். இப்பள்ளிவாசலுக்கு வரலாற்று ரீதியாக சிறப்பு சேர்ப்பதுதான் இப்பள்ளிவாசலில் வருடாவருடம் நடத்தப்படும் கொடியேற்ற விழாவாகும்.

வருடாவருடம் ஜமாதுல் ஆகிர் முதல் பிறையுடன் ஆரம்பமாகும் இக்கொடியேற்ற விழாவானது சங்கைமிகு சாஹுல் ஹமீது ஒலியுல்லாஹ்வின் வருடாந்த நினைவு வைபவமாகும்.

வழமைபோல் இவ்வருடமும் நாளை 24ஆம் திகதி சனிக்கிழமையுடன் இப்பள்ளிவாசலின் 201ஆவது வருடாந்த கொடியேற்ற விழா ஆரம்பமாகின்றது.

இந்நானிலத்தில் இருளகற்றி ஒளியூட்ட வந்த நபி பெருமானார் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களின் 23ஆவது தலைமுறையில் செய்யது ஹசன் குத்தூஸ் செய்யது பாத்திமா தம்பதிகளுக்கு மகனாக ரபியுல் அவ்வல் மாதம் வெள்ளிக்கிழமை தென்னிந்தியாவின் மாணிக்கப்பூர் எனும் ஊரில் பிறந்தவர்கள்தான் சங்கைமிகு சாஹுல் ஹமீத் வலியுல்லாஹ்.

இஸ்லாத்தின் ஞான விளக்கத்தை பரந்த உலகின் பல்வேறு பாகங்களுக்கும் எடுத்துச் சென்று இருளகற்றி ஒளி பெறச் செய்த பெருமை பல மகான்களை சாரும். தன்னலம் மறந்து மக்களுக்கு அறிவூட்டி தொண்டு செய்வதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு ஊண், தீன் அற்று உற்றார் உறவினரை வெறுத்து இறைவனது வழிநடந்து எல்லா உலகத்தையும் இன்ப வாழ்க்கையில் ஆழ்த்த நினைத்து இறைதொண்டாற்றிய ஒரு பெரும் மகானே சங்கைமிகு சாகுல் ஹமீத் வலியுல்லாஹ்.

அப்பெருமகானின் நினைவுச் சின்னம் அவர் இறந்து பல ஆண்டுகள் சென்ற பின்னரும் அவர் செய்த இறைத் தொண்டின் பலனாக பூத்துக் காய்த்து கனிந்து வருகின்றது. அவரின் வாழ்க்கையும் வரலாறும் உலக மக்களுக்கு மிக உன்னதமான படிப்பினையும் முன்மாதிரியுமாகும்.

வேண்டிரை வீசும் வீயன் நாகூர் அண்ணல் சாஹின் சாஹே சாஹுல் ஹமீத் ஆண்டகை மனித சமூகத்திற்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பெரியது. மாணிக்கப்பூரில் பிறந்து, கொஞ்சும் அரபுமொழி வல்லுனராகி தந்தை, தாயைத் துறந்து ஞானவழி நடக்கவிழைந்து, ஆண்டவனின் பாதையில் இறங்கி, பிறந்தகம் விட்டு வெளியேறிச் சென்று, பெரும் அற்புதங்கள் செய்த பெருமகானின் சரிதையை நினைக்க நினைக்க உள்ளம் உருகுகின்றது.

தனது எட்டாவது வயதிலேயே குர்ஆன் ஓதி முடித்தார். அதன் பின்பு தனது இளம் வயதிலேயே இஸ்லாமிய நற்பணி நோக்கோடு உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்றார். இவரின் ஆத்மீக சுற்றுலாவின் ஒரு பகுதியாக இலங்கைக்கு வந்து தப்தர் ஜெய்லானி எனும் இடத்தை அடைந்தார். இலங்கையின் தென்பகுதி கரையை அடைந்த அவர் புனித ஸ்தலங்களில் ஒன்றாகிய நபி ஆதம் (அலை) அவர்களின் பாதம் பட்ட இடத்தையும் தரிசித்துவிட்டு தொடர்ந்தும் கரையோரப் பகுதியாகிய தென்கிழக்கு நோக்கி வந்தார்.

அந்த சமயத்தில் கல்முனைக்குடியில் வசித்தவர் தான் மர்ஹூம் முஹம்மது தம்பிலெப்பை. இவர் மார்க்கத்திலும் கல்வி ஞானத்திலும் ஈடுபாட்டுடன் செயற்பட்டார். உயர் பண்புடன் ஒழுக்கசீலராக வாழ்ந்து வந்த இவர் இக்காலப் பகுதியில் கடுமையாக நோய்வாய்ப்பட்டார்.

கடும் நோயினால் அவஸ்தைப்பட்ட இவர் கடலில் நீராடவும் சுத்தமான காற்றை சுவாசிக்கவும் கல்முனைக்குடி கடற்கரை ஓரம் ஒரு குடிசையை அமைத்து வாழ்ந்து வந்தார். இவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டு இருந்த போதிலும் தமது அன்றாட மார்க்கக் கடமையை செய்துவரத் தவறவில்லை.

கால ஓட்டத்தில் ஒரு வெள்ளிக்கிழமை தமது இரவுத் தொழுகையின் பின் அயர்ந்து தூங்கிவிட்ட முஹம்மது தம்பிலெப்பையின் கனவில் ஒரு வாட்டசாட்டமான மனிதர் பூரண சந்திரனை ஒத்த முகத்துடன் தலையில் பச்சை நிற தலைப்பாகையுடன் தோன்றி,

''உமது குடிசையின் கிழக்கே சுமார் 100 மீற்றர் தூரத்தில் கடற்கரை மணலைக் குவித்து வைத்திருக்கிறேன். நீர் அவ்விடம் சென்று அடையாளம் இருக்குமிடத்தில் எனது நினைவாக ஓர் இல்லம் அமைத்து விடும். இன்றுடன் உம்மைப் பீடித்துள்ள நோயும் அகன்றுவிடும். என் பெயர் ஷாகுல் ஹமீத்'' என்று கூறி மறைந்து விட்டார்.

கண்விழித்துப் பார்த்தபோது பொழுது புலர்ந்திருந்தது. அவரின் உடலில் இருந்த நோய் முற்றாக குணமாகி இருந்ததோடு, நோய் இருந்தமைக்கான எவ்வித அடையாளமும் இருக்கவில்லை. உடனே இறைவனைப் புகழ்ந்தவராக குறிப்பிட்ட மண் குவியலைத்தேடி கண்ணுற்று அருகில் இருந்த மரங்களை தறித்து கம்புகளைக் கொண்டு அவ்விடத்தில் பந்தல் அமைத்தார்.

இச்சம்பவங்களை அன்றைய ஜும்ஆத் தொழுகையின் பின் பொதுமக்களிடம் கூறினார். பொதுமக்களும் அவ்விடம் வந்து அடையாள பொருட்களை கண்ணுற்றதோடு அவரின் நோயும் முற்றாக குணமாகி உள்ளதையும் அவதானித்தனர். இவற்றையெல்லாம் கண்ணுற்ற மக்கள் பந்தலை செப்பனிட்டு தர்ஹாவாக மாற்றினர். சாஹுல் ஹமீது ஒலியுல்லாஹ் பெயரில் மௌலூது ஓதி குர்ஆன் பாராயணம் செய்ததோடு, அவரின் பெயரில் அன்னதானமும் வழங்கினர்.

சங்கைமிகு சாஹுல் ஹமீது வலியுல்லாஹ் பெயரில் மக்கள் அதிக நம்பிக்கை கொண்டு தொடர்ந்தும் அவ்விடத்தில் கூடத்தொடங்கினர். இதனால் சங்கைமிகு சாஹுல் ஹமீது நாயகம் அவர்கள் வபாத்தான ஜமாதுல் ஆகிர் மாதம் தலைப்பிறையுடன் இந்த தர்ஹாவில் தொடர்ந்து 12 நாட்கள் அவரின் பெயரில் மௌலூது ஓதப்பட்டு பன்னிரெண்டாம் நாள் மாபெரும் கந்தூரி அன்னதானமும் கொடுக்கும் வழக்கம் ஏற்பட்டது.

இதுவே கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவாசலினதும் அதன் கொடியேற்றப் பெருவிழாவினதும் வரலாறாகும்.

இக்கொடியேற்றக் காலப்பகுதியில் தர்ஹாவில் தொடர்ந்து 12 நாட்கள் மார்க்க சொற்பொழிவுகள், மௌலூது மஜ்லிஸ், பக்கீர் ஜமாஅத்தினரின் ராத்திபு மஜ்லீஸ் என்பன சிறப்பாக நடைபெறும்.

இவ்வாறு நாளை (24) சனிக்கிழமை கொடியேற்றப்பட்டு எதிர்வரும் 2023 ஜனவரி மாதம் 05ஆம் திகதி வியாழக்கிழமை மாபெரும் கந்தூரி அன்னதானத்துடன் இவ்விழா இனிதே நிறைவுபெறும்.

இப்பள்ளிவாசலில் ஏழு அடுக்குகளைக் கொண்ட பிரம்மாண்டமான மினராவும் மூன்று அடுக்குகளைக் கொண்ட சிறிய மினரா ஒன்றும் கம்பீரமாக காட்சி தருகின்றன. அத்துடன் முற்றாக புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள இந்த தர்ஹாவில் மேலும் மூன்று சிறிய மினராக்களும் வானுயர்ந்து கம்பீரமாக காட்சி தருகின்றன. இவற்றிலேயேதான் வருடாவருடம் கொடியேற்றப்படுகிறது.

இவ்விழாவானது கிழக்கிலங்கை இந்து - முஸ்லிம் மக்களினால் இன பேதமற்ற முறையில் கொண்டாடப்படுவதால் இரு சமூகங்களின் உறவு பலமாக இந்த தர்ஹா திகழ்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கல்முனைக்குடி கடற்கரை எல்லையிலிருந்து 20 மீற்றர் எல்லையில் இருக்கும் இரு பெரிய சிறிய மீனராக்களும் கடல் எல்லையிலிருந்து 40 மீற்றர் எல்லையிலிருக்கும் அழகிய தர்ஹாவும் சென்ற 2004-12-26ஆம் திகதி ஏற்பட்ட கடல்கோள் பேரலைகளினால் தாக்கப்பட்ட போதிலும் இந்த தர்ஹாவும் மினராக்களும் எவ்வித சிறு சேதங்களுமில்லாமல் கம்பீரமாக இன்றும் காட்சி தருவது பேராச்சரியமாகும்.

மேலும், இந்த தர்ஹாவின் கொடியேற்ற நிகழ்வின் முக்கியத்துவம் கருதி கல்முனை பிரதேச செயலாளர் சென்றமுறை இதனை விசேட வர்த்தமானி ஊடாக அறிவித்தமை வியக்கத்தக்கதாகும்.

இன்ஷா அல்லாஹ் வழமைபோல் இம்முறையும் கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹா கொடியேற்ற விழா வெற்றிகரமாக முடிவடைய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.

அப்துல் ஜப்பார் சமீம் ஜே.பி.
கல்முனை





பேருவளை சீனன்கோட்டை குட்டிமலை ஜலாலிய்யா குர்ஆன் மத்ரஸா சிறார்களின் சாதனைகளை கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் மௌலவி முஹம்மத் இக்ராம் (நுலாரி) தலைமையில் ஜலாலிய்யா தர்கா மஸ்ஜிதில் சிறப்பாக நடைபெற்றது.

சீனன்கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளர்களான எம்.எம்.எம்.சிஹாப் ஹாஜியார், அருஸ் அனஸ், இணைப் பொருளாளர் ஸப்வான் நயீம், உறுப்பினர் அஷ்செய்க் இஹ்ஸானுதீன் அபுல்ஹசன் (நளீமி), குர்ஆன் மதாரிஸ் பணிப்பாளர் மௌலவி எம்.டபிள்யூ.எம்.பஹ்ரி (மிஸ்பாஹி) ஆகியோர் விழாவில் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

சீனன்கோட்டை குர்ஆன் மதாரிஸின் கீழ் உள்ள குர்ஆன் மத்ரஸாக்களுக்கிடையே 41ஆவது வருடமாகவும் வாலிபர் ஹழரா ஜமாஅத் நடத்திய மீலாத் சன்மார்க்கப் போட்டியில் மேற்படி மத்ரஸா முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்று மத்ரஸாவுக்கு புகழ் சேர்த்த அதிபர், முஅல்லிம்கள் மற்றும் மாணவர்கள் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

சிறார்களின் பல்வேறு நிகழ்ச்சிகளும் இங்கு மேடையேற்றப்பட்டதோடு, ஜலாலிய்யா தர்கா பள்ளிவாசல் நிர்வாகிகள், இணைச் செயலாளர் நஸ்ஹான் காஸிம் உட்பட பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் பங்குபற்றினர்.

(பேருவளை பீ.எம்.முக்தார்)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

22.12.2022 நாணய மாற்று வீதம்

நாணயம்	கொள்வனவு வீதம்	விற்பனை வீதம்
அவுஸ்திரேலியன் டொலர்	130 0827	141 4732
கனேடியன் டொலர்	152 1 35	164 2304
சீன யுவான் (ரென்மின்பி)	4 ,6333	42 78 8
யூரோ	270 2 58	285 8540
ஜப்பான் யென்	1 6083	1 7210
சிங்கப்பூர் டொலர்	154 5635	166 730
ஸ்ரேலிங் பவுன்	324 5 7	340 85
சுவிஸ் பிரான்ங்	250 760	3 4 1674
ஐ.அ.டொலர்	250 0862	260 5502

நாடு	நாணயம்	விற்பனை வீதம்
பஹ்ரைன்	பஹ்ரைன் தினார்	852 1142
குவைட்	குவைட் தினார்	0,074 8336
ஓமான்	ஓமான் றியால்	832 1126
கட்டார்	கட்டார் றியால்	88 2881
சவூதி அரேபியா	சவூதி அரேபிய றியால்	85 4483
ஐக்கிய அரபு இராச்சியம்	ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம்	87 7618

மதிப்பீட்டு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பில் கோபா குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கல்

ஆராய நாடாளுமன்றத்தில் விசேட நிகழ்வு

அரசாங்க நிறுவனங்களில் மதிப்பீட்டு நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக்கு (கோபா குழு) ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பான விசேட நிகழ்வொன்று கோபா குழு உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் நாடாளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்றது.

கோபா குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசிம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை மதிப்பீட்டு சங்கத்தின் (Sri Lanka Evaluation Association / SLEvA) பிரதிநிதிகள் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். தேசிய மதிப்பீட்டு சட்டமூலத்தின் பூர்வாங்க வேலைகளை நிறைவு செய்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தல் மற்றும் இலங்கையின் தேசி யத்தை உறுதிப்படுத்தும் வகையில் அதன் பரிந்துரைகளை ஆராய்ந்து நாடாளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக நாடாளுமன்ற விசேட குழு வழங்கிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் இதில் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட அலுவலகத்தை நிறுவும்போது மதிப்பீட்டுப் பிரிவை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பிலும் இங்கு கருத்துகள் முன்வைக்கப்பட்டன. தேசிய மதிப்பீட்டுக்கொள்கை தயாரிப்பை துரிதப் படுத்த வேண்டியதன் அவசியமும் இங்கு வலியுறுத் தப்பட்டது.

முறையான தேசிய மதிப்பீட்டு செயல் முறையின் அவசியத்தை வலியுறுத்திய கோபா குழுவின் தலைவர், இது ஒரு பூர்வாங்க கலந்துரையாடல் என்றும், எதிர்காலத்தில் இது பற்றி மேலும் விரிவாகக் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர்கள் பிரசன்ன ரணவீர, காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, பிரதீப் உந்துகொட, வசந்த யாப்பா பண்டார, சஹன் பிரதீப் விதான, சரித ஹேரத் மற்றும் ஹரிணி அமரசூரிய ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க, உதவிச் செயலாளர் நாயகம் டிக்கிரி கே. ஜயதிலக மற்றும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



நுவரெலியாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஸ்வரன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பொன்னாடை போர்த்தி வரவேற்றனர். (ஆ.ரமேஸ்)

சர்வதேச வர்த்தகத்திற்கான அலுவலகம் அமைப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய சர்வதேச வர்த்தகம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக சர்வதேச வர்த்தக அலுவலகம் ஒன்றை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சர்வதேச வர்த்தகம் தொடர்பான நிறுவனங்களால் தனித்தனியாக மேற்கொள்ளப்படும் அணுகுமுறைகளில் காணப்படும் குறைபாடுகளைத் தவிர்ப்பதன் மூலமும் அதன் செயற்பாடுகளை மிகுந்த செயல் திறனுடனும் முறையாக மேற்கொள்ளும் வகையிலும் இந்த புதிய அலுவலகம் நிறுவப்படும். இதனுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து, பொருளாதாரத்திற்கு சர்வதேச வர்த்தகத் துறைகளின் அதிகபட்ச பங்களிப்பை வழங்க இதனூடாக நடவடிக்கை எடுக்கப்படும்.

பொருளாதார மறுமலர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படாது மறைந்து காணப்படும் வர்த்தகம் மற்றும் முதலீட்டுத்துறைகளின் திறனைப் பயன்படுத்துவது அரசாங்கத்தின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படை அங்கமாகும்.

அதற்கமைய, முதலில் தெற்காசியாவுடன் இணைந்தும் பின்னர் கிழக்கு நோக்கி விஸ்தரிப்பதன் மூலம் சீனா, தாய்லாந்து மற்றும் இந்தோனேஷியாவுடன் இணைந்து, இறுதியாக உலகின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் மக்கள் தொகையில் 30% உரிமையைக் கொண்டுள்ள 'பிராந்திய விரிவான பொருளாதார கூட்டணி' (Regional Comprehensive Economic Partnership, RCEP) உடன் இணைவதே இலங்கையின் இலக்காகும்.

இதற்கு அடித்தளமிடும் வகையில் சர்வதேச வர்த்தக அலுவலகம் நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவப்படும். இதற்காக சர்வதேச வர்த்தகத்தில் நிபுணத்துவம் பெற்ற மற்றும் புகழ்பெற்ற ஆலோசனைக்குழு நியமிக்கப்பட இருப்பதோடு சர்வதேச வர்த்தக தூதுவரால் இந்த அலுவலக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

இதனுடன் தொடர்புள்ள அனைத்து அமைப்புகளாலும் பரிந்துரைக்கப்படும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு நிறுவன கட்டமைப்பை இது கொண்டிருக்கும். சுதந்திர வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகளை நடத்தும், தேசிய வர்த்தக பேச்சுவார்த்தைக் குழுவும் இந்த அமைப்பில் ஒருங்கிணைக்கப்படும்.

மேலும், 2023 வரவு-செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டதற்கு அமைய, இந்த சர்வதேச வர்த்தக அலுவலகம், முதலில் நிதி அமைச்சின் கீழ் நிறுவப்படும். பின்னர் அது வெளிவிவகார அமைச்சுடன் ஒருங்கிணைக்கப்படும். சர்வதேச வர்த்தகத்துக்கென பிரத்தியேகமான அலுவலகம் ஒன்று ஸ்தாபிக்கப்படும்வரை, அதன் பிரதான உத்தியோகத்தர்களின் தேவையை நிறைவு செய்வதற்காக அதன் பணிகள் ஜனாதிபதி செயலகத்தில் முன்னெடுக்கப்படும்.

அதற்கமைய, 2018 மே மாதம் முதல் அமுலுக்கு வரவேண்டி இருந்தபோதும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ள இலங்கை-சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதே சர்வதேச வர்த்தக அலுவலகத்தின் முதல் பணியாகும்.

இலங்கை-சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையில், இரு நாடுகளாலும் பரிந்துரைக்கப்பட்ட அதிகாரிகளைக் கொண்ட ஒருங்கிணைந்த குழு 2023 ஜனவரி மாதம் கூடி ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகள் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும்.

இதனுடன் இணைந்ததாக அடுத்த ஜனவரி மாதமளவில் இந்தியா, சீனா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கு சர்வதேச வர்த்தக அலுவலகம் நடவடிக்கை எடுக்கும். இந்த நோக்கத்திற்காக, பிரதான பேச்சுவார்த்தையாளர் ஒருவரும் விசேட துறைகள் தொடர்பான உப குழுக்களைக் கொண்ட தேசிய வர்த்தக பேச்சுவார்த்தைக் குழு (NTNC) ஒன்றும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ளன.

இதனுடன் இணைந்ததாக, இந்தியா, சீனா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்தியாவுடனான 12ஆவது சுற்று பேச்சுவார்த்தையும் சீனாவுடன் 7ஆவது சுற்று பேச்சுவார்த்தையும் தாய்லாந்துடன் 3ஆவது சுற்று பேச்சுவார்த்தையும் 2023ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் நடைபெறவுள்ளன. அடுத்த வருடத்திற்குள் இந்தப் பேச்சுவார்த்தையை நிறைவு செய்ய அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளின் நிலைமை குறித்து தெளிவுபடுத்துவதற்காக ஒவ்வொரு பேச்சுவார்த்தையின் ஆரம்பத்திலோ அல்லது நிறைவிலோ வர்த்தகப் பிரவேசத்தின் இறுதிப் பயனாளிகளான வர்த்தக சபைகள்/சங்கங்களுடன் சம்பந்தப்பட்ட தரப்பினரை தெளிவுபடுத்தும் நிகழ்வுகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே முதலாவது தரப்பினருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி 2022 நவம்பர் 17ஆம் திகதி நடத்தப்பட்டது. மேற்கூறிய செயற்பாடுகளுக்கு இணைந்ததாக, இந்த அலுவலகத்தின் மூலம் பங்களாதேஷ் மற்றும் இந்தோனேஷியாவுடனான முன்னுரிமை வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகளை புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். வெளிவிவகார அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய வேறு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, சர்வதேச வர்த்தக அலுவலகம் தற்போதுள்ள வர்த்தக ஒப்பந்தங்களை செயற்படுத்துவது தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்.

யாழ்.பல்கலை மாணவர்களால் சமுதாயக்கல்வி செயற்றிட்டம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீட மாணவர் ஒன்றியத்தால் சமுதாயக்கல்வி செயற்றிட்டமொன்று நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம், திருநெல்வேலி முத்து தம்பி மகா வித்தியாலயத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்களிடம் சேகரிக்கப்பட்ட பாடசாலை உபகரணங்கள் நலிவடைந்த மாணவர்களுக்கு வழங்கும் பொருட்டு பாடசாலை அதிபருக்கு வழங்கிவைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் நிமலதாசன், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீட மாணவர் ஒன்றியத்தலைவர் வி.பிரவீன், முகாமைத்துவபீட மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

கைதான இந்திய மீனவர்களுக்கு 27ஆம் திகதிவரை விளக்கமறியல்

இலங்கை கடற்பகுதியில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 12 பேரையும் டிசம்பர் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் நேற்று (22) உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை (21) பகல் பருத்தித்துறை அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் ஒரு படகையும் அதிலிருந்த 12 மீனவர்களையும் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் மயிலிட்டி அழைத்து வரப்பட்டு கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இந்திய மீனவர்களுக்கு எதிராக கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினரால் பருத்தித்துறை நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்ட வழக்குத் தாக்கலின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி குறித்த மீனவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

தமிழினியின் கணவர் ஜெயக்குமார் காலமானார்



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளராக செயற்பட்ட தமிழினியின் கணவர் ஜெயக்குமார் காலமாகியுள்ளார்.

பிரித்தானியாவில் வசித்து வந்த மகாதேவன் ஜெயக்குமார் (ஜெயன்தேவா) நேற்று முன்தினம் (21) பிரித்தானியாவில் காலமானார்.

வடமராட்சி, கரவெட்டியை சேர்ந்த ஜெயக்குமார் யுத்தத்தின் பின்னர் தமிழினியை திருமணம் செய்திருந்தார். சில வருடங்களின் பின்னர் தமிழினி காலமானார்.

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருந்த கணவர் ஜெயக்குமார் அதற்கான சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே காலமானார்.

திகதி 21.12.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4976
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.10,230,440.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.14,163,716.00
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 5 7 6 3 6 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3218
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.5,897,640.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 14 27 63 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.64,418,075.60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1431
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,099,660.00
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள் 3 4 6 1 2 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,356,336.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 1006
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,615,120.00
வெற்றி இலக்கினம் C வெற்றி இலக்கங்கள் 12 18 41 64
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 138,709,644.80

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 285
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.8,683,100.00
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 11 17 41 42
விசேட இலக்கினம் கன்னி
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,602,147.60

கோடி 28+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1324
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,698,420.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.287,756,766.00
U 08 24 25 35 43
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011 4669475 Web : www.nlb.lk

ஓட்டமாவடியில் உணவகங்கள் மீது மூன்று நாட்கள் தொடர் பரிசோதனை

தரமற்ற உணவகங்கள் – வெதுப்பகங்களுக்கு பூட்டு

(மட்டக்களப்பு நிருபர்)

உணவகங்களின் தரத்தைப்பேணும் வகையிலும் வாடிக்கையாளர்களுக்கு சுத்தமான உணவு கிடைக்கவேண்டுமெனும் நோக்கிலும் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் தொடர்ச்சியாக 3 நாட்கள் ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள உணவகங்கள், பேக்கரிகள் மற்றும் இறைச்சிக்கடைகள் மீது பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எம்.எச்.எம்.தாரிக் தலைமையில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏ.எல்.நௌபரின் வழிகாட்டலில் இடம்பெற்ற மேற்படி பரிசோதனை நடவடிக்கையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான ஏ.கே.ஜௌபர், என்.எம்.ஷியாம், யூ.எல்.எம்.ஜின்னாஹ் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது, சுத்தமில்லாமல் உணவகங்களில் பாவிக்கப்பட்ட உணவு பரிமாறும் பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், சுகாதார அதிகாரி அலுவலகத்தின் வழிகாட்டுதல்களை பேணாத பேக்கரி மற்றும் உணவகம் சுகாதாரத் தரப்பினரால் மூடப்பட்டு கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், சுத்தமில்லாமல் உணவகங்களில் பாவிக்கப்பட்ட உணவு பரிமாறும் பொருட்கள் கைப்பற்றப்பட்டு சுகாதாரத் தரப்பினரால் அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி குணசிங்கம் சுகுணனின் அறிவுறுத்தலுக்கமைவாக மட்டக்களப்பு மாவட்டம் பூராகவும் தொடர்ச்சியாக இச்செயற்பாடு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கில் நெற்பயிர்ச்செய்கை மூலமான அரிசியை நியாய விலையில் பெற சீன அரசுடன் ஆளுநர் பேச்சு

(கிண்ணியா நிருபர்)

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அண்மையில் சீன அரசாங்கத்திடம் அடுத்த பருவத்திலும் விவசாயிகளுக்கு இலவச அரிசியை வழங்குவதற்குப் பதிலாக சந்தை வாரியத்தின் மூலம் கொள்வனவு செய்ய நிதியுதவி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

சீன தூதுக் குழுவுடனான சந்திப்பொன்று திருமலையில் அண்மையில் இடம்பெற்றபோதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்மூலம் விவசாயிகள் நெற்பயிர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதுடன், நுகர்வோரும் அரிசியை நியாயமான விலையில் வாங்கமுடியும்.

மேலும், இதன்மூலம் அரிசி கொள்முதல் செய்வதற்கு அரிசி சந்தைப்படுத்தல் சபைக்கு அரசு நிதி ஒதுக்குவதிலுள்ள சிரமம் நீங்கும் என்றும் ஆளுநர் கூறினார்.

சீனாவின் வூஹான் மாகாண மக்கள் சங்கத்தின் அனுசரணையுடன் கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு சூரிய ஒளி விளக்குகளை அன்பளிப்பாக வழங்கியமைக்கு தனது விசேட நன்றிகளைத் தெரிவித்த ஆளுநர், விவசாய அபிவிருத்திக்கான மேற்படி முன்மொழிவுக்கு ஆதரவளிக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

விவசாய அமைச்சின் அறிக்கையின்படி எதிர்வரும் பருவத்தில் 6,09,000 மெற்றிக் தொன் நெல் அறுவடை எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குள் விவசாயிகளின் நெற்பயிர்களை சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் அது விவசாயிகளுக்கு மேலும் உதவிக்கரமாக அமையும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

இதற்கிடையில், மாகாணத்தின் சுத்தமான குடிநீர் தேவைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் சீன தூதுக்குழுவிடம் அவர் கேட்டுக் கொண்டார்.

வவுணதீவில் இராணுவத்தினரின் விவசாய அறுவடை விழா

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு வவுணதீவில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த சேதன விவசாயப் பண்ணையின் அறுவடை நிகழ்வு 231ஆம் படைப் பிரிவின் பிரிகேடியர் திலுப பண்டாரவின் தலைமையில் பாவற்கொடிச்சேனை சிப்பிமடு பகுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஒருங்கிணைந்த பண்ணையின் பொறுப்பதிகாரி லெப்டினன்ட் கேணல் ஜே.ஏ.பீ.குணரெட்னவால் விவசாய அறுவடைகள் வவுணதீவு பிரதேச செயலாளர் மற்றும் கிழக்கு மாகாண பிரதி விவசாய பணிப்பாளர் (விரிவாக்கம்) வீ.பேரின்பராசா ஆகியோரிடமும் கையளிக்கப்பட்டன.

வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவின் சிப்பிமடு பகுதியில் தரிசு நிலமாக காணப்பட்ட 20 ஏக்கர் நிலத்தை இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், குறித்த தரிசு நிலத்தில் 16 ஏக்கரில் உன்னிச்சை இராணுவ படைப்பிரிவினால் அரசாங்கத்தின் உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த சேதன விவசாயப் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இங்கு கௌப்பி, பயறு, கச்சான் போன்ற தானியங்களுடன் மரவள்ளி, பயற்றை, புடலங்காய், பாகல், சுரக்காய் போன்ற மரக்கறி

வகைகள் பயிரிடப்பட்டுள்ள நிலையில் இவற்றின் அறுவடைகள் மக்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய விரிவாக்கல் திணைக்கள உத்தியோகத்தர்கள், இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட மேலும் பல அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

எதிர்வரும் நத்தார் தினத்தை முன்னிட்டு மட்டு. தேவாலயங்களுக்குப் பாதுகாப்பு

(கல்லடி நிருபர்)

எதிர்வரும் நத்தார் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பிலுள்ள தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

தேவாலயங்களுக்குள் பிரவேசிக்கும் இனந்தெரியாத நபர்களை அடையாளம் காணும் விசேட வேலைத்திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டிகைக் காலங்களில் மட்டக்களப்பு மாவட்டம் பூராகவும் விசேட பாதுகாப்பு மற்றும் பல்வேறு வேலைத்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, நத்தார் பண்டிகையைக் கொண்டாடும் பொருட்டு பொதுமக்கள் தமக்குத் தேவையான ஆடைகள் மற்றும் பலசரக்குச் சாமான்களைக் கொள்வனவு செய்வதில் தீவிரமாக ஈடுபட்டு வருவதைக் காணமுடிகிறது.

மட்டு. மாநகர சபையில் ஒளிவிழா

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மாநகர சபை பாலன் பிறப்பை வரவேற்கும் வகையில் நேற்று முன்தினம் (21) மாநகர சபை கேட்போர் கூடத்தில் ஒளிவிழாவை நடத்தியது.

இதன்போது மாநகர சபையில் கடமையாற்றும் ஊழியர்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. அத்தோடு மாணவர்களால் பல்வேறு கலைநிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், பிரதி முதல்வர் தி.சத்தியசீலன், மாநகர சபை ஆணையாளர் நா.மதிவாணன், அருட்தந்தை மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை ஊழியர்களின் பிள்ளைகள், குடும்பத்தினர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

மருதமுனை ‘என் நிலவே பாடல்’ இறுவெட்டு வெளியீட்டு விழா

(மருதமுனை நிருபர்)

மருதமுனை ஜெஸீலின் கவி வரிகள் மற்றும் இசையமைப்பில் என் நிலவே பாடல் இறுவெட்டு வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை (24) மாலை 4.00 மணிக்கு மருதமுனை பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி சத்தார் பிர்தௌஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ராஜபுத்திரன் ராசமாணிக்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம்.பாஸில், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவம், ஐவா கெம்பஸ் தவிசாளர் டொக்டர் எம்.எச்.எம்.முனாசிக், விசேட அழைப்பாளராக உலக அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீட் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவர்களுடன் விசேட அதிதிகளாக வர்த்தகர்களான எம்.ஐ.ஏ.பரீட், எம்.எச்.தாஜூதீன், சட்டத்தரணி எவ்.எம்.அமீருள் அன்சார் மௌலானா, பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.ஜி.டி.டி. ஜயதிலக்க ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வைத் தொகுத்து வழங்கவுள்ளார் பிறை எவ்.எம்.வானொலி பிரதி பணிப்பாளர் பசீர் அப்துல் கையூம், இந்திய சினிமாப் பாடலுக்கு நிகராக இலங்கை மருதமுனையிலிருந்து புது மெருகுடன் இப்பாடல் இறுவெட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருமலை மாவட்ட செயலகத்தில் ஒளி விழா

(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட ஒளி விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் (21) மாவட்ட செயலகத்தில் திருமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் அனைத்து மதங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அந்தந்த மதங்களின் விசேட நிகழ்வுகளை எவ்வித வேறுபாடுமின்றி நிறைவேற்றி வருவதாகவும் இவ்விடயம் சமூகத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைவதாகவும், இவ்வொருங்கிணைப்பு நிகழ்வுகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்படாமல் ஏனைய விடயங்களிலும் நிலையானதாக பேணப்படும்போது தேசிய நல்லிணக்கத்தை மேலும் வலுசேர்க்க முடியும் என்றும் இதன்போது அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

நத்தார் செய்தி அருட்தந்தை நியூமனால் முன்வைக்கப்பட்டது. சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இதன்போது அரங்கேறின. கலந்துகொண்ட சிறுவர்களுக்கு நத்தார் பரிசில்களும் அரசாங்க அதிபர் உட்பட அதிகாரிகளால் வழங்கப்பட்டன.

திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரம் கையளிப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு 39 இலட்சம் ரூபா பெறுமதியான சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரமொன்று உத்தியோகபூர்வமாக நேற்று (22) கையளிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ‘சுவாசம்’ வேலைத் திட்டத்தின்கீழ் திருகோணமலை மாவட்டத்தில் சிறுநீரக நோயாளர்கள் அதிகளவில் இனங்காணப் பட்டுள்ளதால் நோயாளர்களின் நலன் கருதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் திருகோணமலை பொது வைத்தியசாலை பணிப்பாளர் ஜகத் விக்ரமரத்னவிடம் வழங்கப் பட்டது.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாடு காரணமாக நோயாளர்கள் அவதியுறும் நிலையில் எமது ‘சுவாசம்’ வேலைத்திட்டத்தின்கீழ் 54ஆவது வைத்தியசாலையாக திருகோணமலை பொது வைத்தியசாலை தெரிவுசெய்யப்பட்டு வழங்கி வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இதேவேளை, நாம் ஆட்சிக்கு வந்தால் 370 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்க திட்டமிட்டுள்ள சிறுநீரக நோயாளர்களுக்கான தனியான பிரிவு ஒன்றினை ஆரம்பிப்பேன். எதிர்காலத்தில் விசேட வைத்திய நிபுணர்கள் தங்குவதற்குரிய விடுதி வசதிகளையும் செய்து கொடுப்பேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உபகரணங்களை வழங்கிவைத்த பின் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், மாவட்ட அமைப்பாளர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஓய்வுபெறும் உதவிக் கல்விப் பணிப்பாளருக்கு பாராட்டு

(பாண்டிருப்பு நிருபர்)

பட்டிருப்பு வலயக்கல்விப் பணிமனைக்கு உட்பட்ட அழகியற்பாட ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் கூட்டம் பட்டிருப்பு வலய நாடகமும் அரங்கியலும் ஆசிரிய ஆலோசகர் வனிதா சுரேஸ் ஒழுங்கமைப்பில் கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அழகியற்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கம் கலந்துகொண்டார்.

இங்கு எதிர்வரும் புதிய ஆண்டில் அழகியற் பாடங்களை மாணவர்கள் விரும்பத்தக்க வகையில் எவ்வாறு கற்பிக்கவேண்டும் என்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்வரும் நாட்களில் தனது 38 வருட கல்விச் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லவுள்ள அழகியற்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கம் ஆசிரியர்களினால் பொன்னாடை போர்த்தி, வாழ்த்துப்பா, பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மணிவிழா காணும் மகேஸ்வரன்

பேராசிரியர்
எம்.ஏ.நுஃமான்
தமிழ்த் துறை, முன்னாள் தலைவர் பேராதனைப் பல்கலைக்கழகம்

இன்றும் ஓர் இலைஞராக துடிப்புடன் செயற்படும் நண்பர் மகேஸ்வரன் மணிவிழாக் காணும் வயதை எட்டிவிட்டார் என்பது ஓர் ஆச்சரியமான உண்மைதான். கடந்தாண்டு நூற்றாண்டு விழாக் கொண்டாடிய பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தின் தலைமை நூலகராக அண்மையில் பதவி உயர்வு பெற்ற மகேஸ்வரன், கடந்த சுமார் முப்பது ஆண்டுகளாக அங்கு உதவி நூலகராகவும். சிரேஷ்ட நூலகராகவும் பணிபுரிந்து வந்திருக்கிறார். அவருடைய முயற்சியினால் நூலகத் தமிழ்ப் பிரிவு விரைவாக வளர்ச்சிபெற்றது. இன்று சுமார் ஒன்றரை இலட்சம் தமிழ் நூல்கள் இங்கு உள்ளன. அவற்றுள் கணிசமான பகுதி - குறிப்பாக, புதிய நூல்கள் மகேஸ்வரன் காலத்தில் சேர்க்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக நூலகர் பதவி என்பது ஒரு பேராசிரியருக்கு நிகரான பதவியாகும். அதற்குத் தன்னைத் தகுதியாக்கிக்கொண்டவர் நண்பர் மகேஸ்வரன். ஆய்வுத் துறையில் தொடர்ச்சியாக ஆர்வத்துடன் ஈடுபட்டுவந்திருக்கிறார். இதுவரை தமிழிலும் ஆங்கிலத்திலும் பதினைந்து நூல்கள் வெளியிட்டுள்ளார். ஏராளமான ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். சர்வதேச ஆய்வு மாநாடுகளில் பங்குபற்றியுள்ளார். அவ்வகையில் அவரது ஆய்வுப் பங்களிப்பு நிறைவானது எனலாம்.

நண்பர் மகேஸ்வரன் ஒரு சமூகசேவையாளருமாவார். மலையக மக்களின் முன்னேற்றத்துக்காக அவர் பல வகைகளில் உழைத்து வந்திருக்கிறார். பல சமூக அமைப்புகளில் இணைந்து செயற்பட்டிருக்கிறார். ஒரு பத்திரிகையாளர் என்ற வகையிலும் அவருடைய பணி சிறப்பானது. கண்டிவாழ் மக்கள் அவருடைய மணிவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் நானும் அவர்களுடன் இணைந்து நண்பர் மகேஸ்வரன் இன்னும் நீண்டகாலம் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து மேலும் தன் பணியைத் தொடர வேண்டும் என்று வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தின் முதல் தமிழ் மகன்

ரவூப் ஹக்கீம்
கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.
ஸ்ரீ. மு. கா. தேசியத் தலைவர்

பேராதனைப் பல்கலைக்கழக பிரதம நூலகரும் இலங்கை ஹொக்கி சம்மேளனத்தின் உப தலைவரும், இலங்கை அணி முகாமையாளரும் பன்னூலாசிரியருமான நண்பர் இரா.மகேஸ்வரனின் மணிவிழாவும் மணிவிழா சிறப்பு மலர் வெளியிடுவதையும் மிட்டு நான் வாழ்த்துரையை அளிப்பதில் மிக மகிழ்ச்சிகொள்கின்றேன்.

சர்வதேச கருத்தரங்குகளில் காத்திரமான பல தமிழ் ஆய்வுகளை சமர்ப்பித்து நூலகத் துறை ஆய்வுகளிலும் தடம் படித்தவர். பன்னூலாசிரியர், நூல்களுக்கான சாஹித்திய மண்டலப் பரிசுகளையும் பெற்றவர். ஆதலால் அவர் தமிழ் இலக்கியத்தின் மீது கொண்டுள்ள பற்றும் ஊக்கமும் விடாமுயற்சியும் அயரா உழைப்புமே இம்மணிவிழா கொண்டாடுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது எனக் கூறினால் அது மிகையாகாது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒரு தமிழ் மகன் பிரதம நூலகராக இருப்பதென்பது தனிப்பெரும் சக்தியும் ஆற்றலுமாகும். இந்நூலகத்திற்கு 100 வருடங்களாகின்றன. இந்த நூறு வருட வரலாற்றில் எட்டு நூலகர்கள் கடமையாற்றியுள்ளனர். இதில் இராசையா மகேஸ்வரன் முதல் தமிழ் மகன் - நூலகராக பதவியைப் பொறுப்பேற்று ஓர் உயரிய ஸ்தானத்தை அடைந்திருப்பதும் இந்த விழாவுக்கு மேலும் வலிமை சேர்க்கின்றது.

பல்கலைக்கழக மாணவர்கள் கற்கின்ற, உருவாகின்ற வெற்றிநடை போடுகின்ற துறைசார்ந்த நூல்கள் எல்லாவற்றையும் கட்டியாள்வது பிரதம நூலகர் இராசையா மகேஸ்வரன் என்ற மகத்தான மனிதரே. இத்தகைய ஆற்றலுள்ள நெருங்கிய நண்பருடன் நானும் சேர்ந்து வெளிநாடுகளில் நடைபெற்ற உலக இஸ்லாமிய ஆராய்சி மாநாடுகளில் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளேன். ஒன்று மலேசியாவில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, மற்றையது தமிழ் நாடு காயல்பட்டினத்தில் நடைபெற்ற உலக இஸ்லாமிய மாநாடு.

எனவே, இவர் பெற்ற புகழோடு மென்மேலும் பல சாதனைகள் செய்து நீடித்த ஆயுளுடன் என்றும் வாழ வாழ்த்துகிறோம்.

ஆற்றல்மிக்க எழுத்தாளர்

பேராசிரியர் பி.எம்.ஜமாஹீர்
தலைவர், மெய்யியல் துறை

நண்பரும் பேராதனைப் பல்கலைக்கழக பிரதம நூலகருமான இராசையா மகேஸ்வரன் அவர்களின் மணி விழாவும் மணி மலர் வெளியீடும் நடப்பதையிட்டு நான் வாழ்த்துரை வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

கலை, இலக்கிய, சுவாசார பண்பாட்டு வளர்ச்சிக்கும் அறிவியல் சிந்தனை வளர்ச்சிக்கும் நண்பர் மகேஸ்வரன் ஆற்றிவரும் பணி அளப்பரியது. தமிழ் இலக்கிய ஆய்வு தொடர்பாகவும் நூலக ஆய்வு தொடர்பாகவும் பல நூல்களை எழுதிய ஒரு பன்னூலாசிரியர். ஆற்றல்மிக்க எழுத்தாளர். பன்முக ஆளுமைகொண்டவர். குறிப்பாக, நூலக வளர்ச்சிக்கு அவர் அளித்துள்ள பங்களிப்பை எல்லா மாணவர் சமூகத்தைத் சேர்ந்தவர்களும் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர்.

"வாழும்போதே வாழ்த்தப்பட வேண்டும்" என்னும் முதியோர் வாக்கிற்கேற்ப தமிழ் இலக்கியத்திற்காக மகத்தான பணி புரியும் மகேஸ்வரனுக்கு மணி விழா எடுப்பது குறித்து நான் அகமகிழ்வுறுகின்றேன்.

இலக்கியப் பணி மகத்துவத்தன்மை வாய்ந்தது என்பதையும் இது ஒரு மகத்தான பணியென்பதையும் நாம் ஒவ்வொருவரும் நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும். அத்தகையதில் மகேஸ்வரன் இலக்கியத்தைப் பெரும்பேறாகக் கருதி தனது நூலக ஆய்வுத் துறையிலும் இலக்கியத் துறையிலும் சிறந்த பணியாற்றி பெரும் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இவரின் இத்தகைய சேவையைக் கருத்திற்கொண்டு மணி விழா எடுக்க முன்வந்தமை தொடர்பில் மகேஸ்வரனுக்களித்த உன்னத நிலையை, உயர் பண்பை, அங்கீகாரத்தை, உணர்ந்தன்மையை வெளிப்படுத்தி நிற்கிறது. இந்நாளில் மணிவிழா நாயகனைப் பாராட்டுவதுடன், விழா வெற்றிபெற இறைவனையும் பிரார்த்திக்கின்றேன்.

செயலூக்கமிக்க ஒருவர்

பேராசிரியர் துரைமனோகரன்
தமிழ்த் துறை, முன்னாள் தலைவர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பிரதம நூலகர் ஆர். மகேஸ்வரனின் மணிவிழாவும் மணிவிழா மலர் வெளியீடும் நடப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்சியடைகின்றேன்.

நாம் இருவரும் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற ஆய்வு மாநாடுகளில் ஒன்றாகக் கலந்து கொண்டுள்ளோம் .

மகேஸ்வரன் ஆய்வு , ஊடகம், விளையாட்டு முதலான பல்வேறு துறைகளிலும் ஈடுபாடுகொண்டு உழைத்து வருபவர். செயலூக்கம் மிக்கவர். அவர் மென்மேலும் உயர்ந்து. சிறந்து விளங்க எனது வாழ்த்துகள்.

இலங்கை பல்கலைக்கழக கல்லூரி 1921ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இது 1942இல் இலங்கை பல்கலைக்கழகம் என பேராதனைக்கு மாற்றம் பெற்றது. 1972ஆம் ஆண்டின் பின் இது பேராதனைப் பல்கலைக்கழகம் என அழைக்கப்பட்டது. 1921ஆம் ஆண்டிலிருந்து நூற்சேர்க்கை 1942இல் பேராதனைக்கு மாற்றப்பட்டது. 2021ஆம் ஆண்டு இலங்கை உயர்கல்விப் பீடமான பல்கலைக்கழகக் கல்வி ஆரம்பித்து 100 வருடங்களாகின்றன. இந்நூறு வருட வரலாற்றில் எட்டு நூலகர்கள் இலங்கை, பேராதனைப் பல்கலைக்கழக நூலகர்களாக கடமையாற்றியுள்ளனர். இதில் எட்டாவது நூலகர் இராசையா மகேஸ்வரனாவார். இவர் இப்பதவியைப் பெறுப்பேற்ற முதல் தமிழ் நூலகராவார்.

இராசையா மகேஸ்வரன், கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியின் பழைய மாணவர். ஹொக்கி விளையாட்டு வீரர். அக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நீண்டகால உப தலைவருமாவார். பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் விரிவை கௌரவ பட்டதாரி. இவர் பேராதனைப் பல்கலைக்கழக மாணவராக இருந்தபோது ஹொக்கி குழுத் தலைவராக, விளையாட்டுச் சபை உறுப்பினராக, தமிழ்ச் சங்க செயலாளராக, விவாத சங்க உப தலைவராக இருந்தவர். பன்விலை விக்னேஸ்வரா வித்தியாலய அதிபராக, கொட்டலை அரசினர் ஆசிரியர் கல்லூரி விளையாட்டுத்துறை விரிவுரையாளராக, பின்னர் பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தில் கல்விசார் உதவி நூலகராக, சிரேஷ்ட உதவி நூலகராக, பிரதி நூலகராக, பதில் நூலகராகவும் தற்போது பிரதம நூலகராக பதவி உயர்ந்தவர். பல்கலைக்கழக கல்விசார் விரிவுரையாளர் சங்க உப தலைவராகவும் அதன் செயலாளராகவும், குறிஞ்சிக்குமரன் கோமில பெரும்பான்மைக்குழு உறுப்பினராகவும் அதன் செயலாளராகவும் இந்து பட்டதாரிகள் சங்கத் தலைவராகவும் பல முக்கிய பதவிகளை வகித்தவர். இன்றும் சில பதவிகளில் இருந்துவருகிறார்.

கண்டி ஹொக்கி சங்கத் தலைவராகவும், இலங்கை ஹொக்கி சங்க உப தலைவராகவும் நீண்டகாலம் கடமையாற்றுவதோடு தேசிய பயிற்றுவிப்பாளர், தேசிய நடுவர் போன்ற தரத்தைப் பெற்றவர். ஹொக்கி மூலம் இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பங்களாதேஷ், மலேசியா, ஹொங்கொங், பெல்ஜியம், ஜேர்மன், இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கு தேசிய குழு முகாமையாளராக, சம்மேளன உப தலைவராக சென்றவர். சிறந்த ஆய்வாளர், ஊடகவியலாளர், விமர்சகர். நூலகத்துறையிலும், இலக்கிய துறையிலும், தனது ஆய்வுக் கட்டுரைகளை இந்தியா, பிரித்தானியா, மலேசியா, சுவிஸ், லண்டன் ஆகிய நாடுகளில் சமர்ப்பித்தவர்.

கோவை செம்மொழி மாநாடு, மலேசிய ஒன்பதாவது உலக தமிழாராய்ச்சி மாநாடு, லண்டன் தமிழியல் ஆய்வு மாநாடு, மலேசியா இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, காயல் பட்டிணம் இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, மலேசியா முருக பக்தி மாநாடு, சிங்கப்பூர் நூலகவியலார் மாநாடு, சென்னை தமிழராராய்ச்சி நிறுவன சர்வதேச கருத்தரங்கு, இந்திய தமிழ்நாட்டு தொல்லியல்கழக 25ஆவது வருட சர்வதேச கருத்தரங்கு, பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறை தமிழ் ஆய்வு தேசிய கருத்தரங்கு ஆகியன இவர் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்த முக்கியமான மாநாடுகளாகும்.

'நதி கடந்த களம்' என்ற ஆய்வு நூலுக்கு மத்திய மாகாண சபை சாகித்ய பரிசு பெற்ற இவர், நாட்டுப்புறப் பாடல்கள், அமைதி வழியும் மதுர மொழியும் ஆண்ட பரம்பரை, அமைதி வழியும் மதுர மொழியும், நூலக விஞ்ஞானம், நதி கடந்த களம், வளமிக்க வழக்காற்றியல் பதிவுச் சுவடுகள் மற்றும் உளவியல் அறிவும் நூலக ஆசிரியர் செல்நெறியும், தொடர்ந்தும் வராதோ, படிக்கத்தியுள்ள பழமொழிகளின் பகுப்பு ஆகியன பற்றி பல நூல்கள் வெளிமிட்டுள்ளார்.

இவரது காலத்தில் டிஜிட்டல் நூலகம் அபிவிருத்திசெய்யப்பட்டதோடு, ஓலைச்சுவடிகள் பேணுதலும் பாதுகாத்தலும் பிரிவு அபிவிருத்திசெய்யப்பட்டு 30,000 சதுர அடிகளைக்கொண்ட புதிய 6 மாடிக் கட்டிடம் கட்டப்பட்டு கணினி நூலகம், கருத்தரங்கு மண்டபம், எண்ணியல் நூலகம், மாடுட நூலக எண்ணக்கரு போன்ற புதிய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் தமிழ்நாடு சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம், சேலம் பெரியார் பல்கலைக்கழகம், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம், கொடைக்கானல் அன்னை திரேசா பல்கலைக்கழகம், திருநெல்வேலி மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் ஆதார சுருதி உரை, விசேட உரை, விசேட அதிதிகள் உரை, சுருத்துரை என பல வகையிலும் கலந்துகொண்டு உரையாற்றியுள்ளார்.

இவரது மனைவி சோமதி மகேஸ்வரன் அரச மிருக வைத்தியராவார். இவருக்கு இரண்டு மகன்மார்கள். இருவரும் உயர்கல்வி கற்று வருகின்றனர்.

தகைசார் பேராசிரியர்
சி. தில்லைநாதன்

இந்துமரபில் அறுபது என்ற எண்ணிக்கைக்கொண்டதாக அமைப்பும் ஆண்டு சுற்று வட்டத்தை ஒருவர் நிறைவுசெய்கிறார் என்பது வாழ்வில் அவர் அடையத்தக்க பேறுகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. அந்த வாழ்வை வெறுமனே உண்டு உடுத்து உறங்குவதாக அமையும். வெற்று வாழ்வாக அல்லாது இதற்கும் இதன் குடும்பத்திற்கும், சமூகத்துக்கும் பயன்தரத்தக்கதாக அமைத்துக் கொள்வாரியின் அந்த நிறைவை உலகமும் உவந்து கொண்டாடும்.

விளையாட்டுத் துறையிலும் ஆய்வுத் துறையிலும் தொடர்ந்து ஈடுபட்டு உன்நாட்டிலும் வெளிநாடுகள் பலவற்றிலுமாக அவர் சாட்டிய வெற்றிகள் பல. தான், தன் குடும்பம், தான் கற்ற பாடசாலை, பல்கலைக்கழகம், தொழில் ஸ்தானம் என்று அனைத்துத் தரப்புக்கும் நன்மையும் பெருமையும் சேர்க்கும் வகையில் பயன் பார்க்காது அவர் ஆற்றும் பணிகளின் நயம் துக்கின் அவர் சார்ந்த சமூகத்தால் அவரைக் கொண்டாடாது இருத்தல் இயலாது. அந்தச் சமூகத்துள் ஒருவனாக நின்று ஆரோக்கியத்தோடும் மகிழ்சியோடும் நீண்ட ஆயுளோடும் கூடிய நிறைவாழ்வு வாழ மகேஸ்வரனை மனதார வாழ்த்துகிறேன்.

நூலகர் மேதைக்குப் பல்லாண்டு கூறுவோம்

பேராசிரியர் வை. நந்தகுமார்

ஆண்டொன்று போனால் அகவை ஒன்று போகும். அந்தவகையில் அகவை அறுபது விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி அது வந்தே தீரும். ஆனால், அந்த அறுபது அகவைக்குள் சாதித்தவைகள் எவை ? இதற்கான விடை பெறும்பாலாக இருக்கும்போதுதான் அகவை அறுபது என்பதும் ஒருவருக்குப் பெருமையை அளிப்பதாக இருக்கும். இந்தப் பெருமை, மகேஸ்வரன் அவர்களுக்கு நிறையவே உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பழகுவதற்கு இனியவரான மகேஸ்வரன் இன்னும் எனது நல்ல நண்பராக இருக்கின்றார். எனது மணிவிழாவில் மகேஸ்வரன் உரையாற்றியமை இன்னும் ஞாபகத்தில் உள்ளது. அவரது பணிவிழாவில் நான் கலந்துகொண்டு வாழ்த்துவதோடு மணிவிழா மலருக்கு இச்செய்தியை வழங்குவதன் மூலம் மேலும் உறவுப் பாலத்தை வெளிக்காட்டிக்கொள்கிறேன். அவர் இன்னும் பல சேவைகள் செய்து மக்கள் தொண்டனாக, ஆன்மீகவாதியாக, நீடுழிவாழ வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்.

பிரதம நூலகர்
இராசையா மகேஸ்வரன்

மா.செ.மூக்கையா

முன்னாள் புலியியல் பேராசிரியர், முன்னாள் புலியியல் துறை தலைவர், முன்னாள் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக துணைவேந்தர், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முதன்மை நூலகர் இராசையா மகேஸ்வரனை மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நன்கறிந்தும் பழகியும் இருக்கிறேன். அவரது சஷ்டி பூர்த்திவிழாவின்போது வெளியாகும் விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை அனுப்பி வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மகேஸ்வரன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புலியில் துறையில் சிறப்பு கலை இளமாணி பட்ட தேர்வுக்கு கற்றுக்கொண்டிருந்த காலத்திலிருந்தே ஒரு மாணவனான அவரை அறிந்திருந்தேன். அவர் ஒரு சிறந்த மாணவனாக பெரும் ஆர்வத்துடன் செயற்பட்டுவந்ததுடன், ஹொக்கி போன்ற விளையாட்டுத் துறையிலும் ஆர்வத்துடன் பங்கேற்று மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலும் சிறந்த வீரராக அறியப்பட்டிருந்தார். பின்வந்த நாட்களில் ஹொக்கி வீரர்களைப் பயிற்றுவிப்பாளராக செயற்பட்டவர்.

தனது மேம்பாட்டுக்காக அயராது உழைத்து கல்வி, விளையாட்டு, கலை, கலாசாரம் ஆகியவற்றிலும் தன்னை திறம்பட மெம்பைப்படுத்திக்கொண்ட மகேஸ்வரன் பொது வாழ்க்கையிலும், தன்னை சேவையாளனாக அடையாளப்படுத்திக்கொள்ளத் தவறவில்லை. பல்கலைக்கழகக் குறிஞ்சிக்குமரன் கோயிலின் நிர்வாகம் மற்றும் மலையக இளைஞர்களின் கல்வி போன்ற பலதுறைகளிலும் சேவையாற்றியவர். அவ்வப்போது அரசியலிலும் இவரது பங்கேற்பு குறிப்பிடத்தக்கதாக இருந்துவந்துள்ளது.

மகேஸ்வரன் தனது பணிகளையும் சேவைகளையும் தொடர்ந்தும் திறம்படவும் முழுமையாகவும் ஆற்ற அவருக்கு சிறந்த ஆரோக்கியத்தையும் நீண்டஆயுளையும் தந்து அருளுமாறு எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரனைப் பிரார்த்திக்கிறேன். அவரது சஷ்டி பூர்த்தி விழா சிறப்பாக நடந்தேற மனமார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ள கிடைத்த வாய்ப்புக்காக பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மகேஸ்வரன் எனும் நண்பனும் நானும்

பேராசிரியர். வ.மகேஸ்வரன்

நட்பு என்பதற்கு திருவள்ளுவர் பல்வகையான வரைவிலக்கணங்களைக் கூறுவார். அவ்வாறான வரைவிலக்கணங்களின் கூட்டுக்கலவையான நண்பன் இராசையா மகேஸ்வரனை நான் பார்க்கிறேன்.

மகேஸ்வரனுக்கும் எனக்குமான உறவு சுமார் 30 வருடங்களுக்கும் மேலானது. பேராதனையில் அவரை கண்ட நாள்முதல் ஏதோ வகையில் எனக்கும் அவருக்குமான நட்பு உயமானது. இருவரும் ஒரே இராசிக்காரர். பெயரும் அப்படியே. அதனால்தானோ என்னவோ அந்த நட்புக்கு உரம் கிடைத்தது. அது இன்றுவரை நீள்கிறது.

மகேஸ்வரன் பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்திற்கு உதவி நூலகராக நியமனம் பெற்றது முதல் எனக்கும் அவருக்குமிடையிலான உறவு இறுக்கமடைகிறது. பேராதனையில் நான் மாணவனாக இருந்தபோதே நூலகத்தின் உயாகன். விரிவுரையாளராக சென்றதன் பின்பும் அது தொடர்ந்தது. மகேஸ்வரனின் வரவுடன் அது மேலும் வலுப்பெற்றது. நான் மகேஸ்வரனின் நண்பன் என்பதனால் நூலகத்தின் சகலதுணங்களிற்கு சென்று வரவும், அரிய நூல்களைப் பெறவும் முடிந்தது. தமிழ்ப் பிரிவில் பணிபுரியும் நூலக உத்தியோகஸ்தர்களான சிவலிங்கம், சந்திரசேகரன், அவரது மகன் ஸ்ரீதரன் மற்றும் ரொட்னி ஆகியோர் மகேஸ்வரனுக்கு அளித்த மரியாதையையே எனக்கும் அளித்தனர். அவர்கள் மாத்திரமல்ல, சிங்கள நண்பர்களும் அவ்வாறே. எனக்கு ஒரு நூல் அவசியப்படும் நேரத்திலெல்லாம் என் கைகளில் உடனடியாகச் சேரப் பண்ணினார்கள். இதனால் எனது துறைக்கு அடுத்த துறையாக நூலகமும் விளங்கியது என்பதில் ஐயமில்லை.

மகேஸ்வரன் பல்கலைக்கழகத்துள் மாத்திரமல்ல, அதற்கு வெளியேயும் பல தளங்களில் இயங்குகின்றார். அடிப்படையில் அவர் ஒரு 'ஹொக்கி விளையாட்டு வீரர்'. இதனால் இலங்கை ஹொக்கி விளையாட்டு அமைப்பின் முகாமையாளர், கண்டி வர்த்தக சங்கத்தின் பிரமுகர், பள்ளேகலபில அமைந்துள்ள பல கோயில்களின் நிர்வாக சபை உறுப்பினர். பல அமைப்புகளின் உறுப்பினர். இவையெல்லாம் அவருடைய நடத்தைக் கோலத்தால் கிடைத்தவை. அவர் பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை அதனிலும் இகழ்தலும் இலமே. எனும் சங்கப்புலவர் கணியன் பூங்குன்றனாரின் கோட்பாட்டின்வழி இயங்குபவர். அதனால் அவருக்கு யாவரும் சமமே. பெரியவர், சிறியவர் என்ற பேதம் அவருக்கு இல்லை.

அவர் அமுத விழா, நூற்றாண்டு விழா என்பவை கண்டு இன்னமும் உயர்ந்த தளங்களிலும், வளங்களுடனும், நீடித்த ஆயுளுடனும் வாழவேண்டும் என்றும் வாழ்த்துகிறோம்.

படங்களும் தகவல்களும்
இரா.அ. இராமன்

தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் முதலிடம் பெற்ற யாழ். செயலகத்தை கௌரவிக்கும் விழா

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தின் ஏற்பாட்டில் தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் யாழ். மாவட்ட செயலகம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமைக்கான கௌரவிப்பு விழா யாழ். மாவட்ட செயலக கணக்காளரும் நலன்புரிக் கழகத்தின் தலைவரு மான அ. நிர்மலின் தலைமையில் நேற்று (22) காலை யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் 2020 - 2021ஆம் ஆண்டுவரை நடத்தப்பட்ட அரச திணைக்களங்களுக்கிடையிலான தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் பங்குபற்றி யாழ். மாவட்ட செயலகம் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமையை முன்னிட்டு இந்தத் தருணத்தைக் கொண்டாடும் முகமாக இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த யாழ். அரசாங்க அதிபர், அர்ப்பணிப்பான வினைத்திறன் மற்றும் விளைதிறனான செயற்பாட்டாலும், மக்களுக்கு வழங்கிய உன்னதமான சேவையாலும் இந்த வெற்றி கிடைக்கப்பெற்றதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி), பதவி நிலை உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாண மாவட்ட செயலக உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

யாழ். சிறையிலிருந்த மியன்மார் அகதிகள் மிரிஹான தடுப்பு முகாமுக்கு மாற்றம்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மியன்மார் அகதிகள் மிரிஹான தடுப்பு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்த 104 மியன்மார் அகதிகள் மூன்று பஸ்கள் மூலம் நேற்று (22) காலை 06 மணியளவில் மிரிஹான தடுப்பு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மியன்மாரிலிருந்து விரட்டப்பட்ட ரோஹிங்கிய இன முஸ்லிம்கள் பங்களாதேஷில் அமைந்திருந்த அகதி முகாமில் தங்கியிருந்த சமயம் இந்தோனேஷியாவிற்கு தப்பிச் செல்லும் நோக்கில், படகு மூலம் சட்டவிரோதமாக பயணித்தபோதே யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் படகு பழுதடைந்து தத்தளித்தனர்.

இவ்வாறு தத்தளித்தவர்கள் கடந்த 17ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு மறுநாள் 18ஆம் திகதி கடற்படையினரின் படகு மூலம் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு கொண்டுவரப்பட்டு மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் அங்கு தங்கவைக்கப்பட்டனர்.

சட்டத்துக்குப் புறம்பாக இலங்கை கடற்பரப்பில் மீட்கப்பட்ட 104 பேர் மற்றும் அவர்களை சட்டத்துக்குப் புறம்பாக நாடு கடத்த முற்பட்ட வலையமைப்புக்கு உதவியவருக்கும் எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் காங்கேசன்துறை பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்நிலையில், கடந்த 19ஆம் திகதி 105 பேரும் தடுத்துவைக்கப்பட்ட இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன், 104 பேரையும் அகதிகளுக்கான ஐ.நா. ஆணையகம் பொறுப்பேற்பதாயின் குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தின் அனுமதி பெற உத்தரவிட்டதுடன், அகதிகள் அனைவரையும் மிரிஹான தடுப்பு முகாமில் தங்க வைக்க உத்தரவிட்டார்.

அத்துடன், நாடொன்றுக்கு 105 பேரையும் கடத்த முயற்சித்தவரை எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார்.

அதனையடுத்து கடந்த 19ஆம் திகதி இரவு 8 மணியளவில் 105 பேரும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், 105 பேரில் விளக்கமறியல் கைதியான ஒருவரை தொடர்ந்து யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்துவைத்துள்ளதுடன், ஏனைய 104 பேரும் மிரிஹானவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இளைஞர்கள் வன்முறைகளில் ஈடுபடாமல் இருக்கவேண்டும்

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் வேண்டுகோள்

(யாழ். நிருபர்)

அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவும்போது விபத்துகளில் சிக்காமலும் வன்முறைகளில் ஈடுபடாமலும் இளைஞர்கள் இருக்கவேண்டும் - என சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கனேடியத் தமிழர்கள் 10 மில்லியன் ரூபா பெறுமதியான உயிர்காக்கும் மருந்துகளை தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்கினர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது. இந்நிலையில், இளைஞர்கள் விபத்துகளில் சிக்கல், வாள்வெட்டு, வன்முறைச் சம்பவங்களிலும் ஈடுபடல் போன்றவற்றால் தேவையற்ற நெருக்கடி ஏற்படுகின்றது.

எதிர்வரும் காலங்களில் பாடசாலைகளில் காகித தட்டுப்பாடு ஏற்படும். இவ்வாறான நேரத்தில் புலம்பெயர் தேசத்தவர்கள் நீங்கள் படித்த பாடசாலையிலுள்ள மாணவர்களுக்கு உதவுவதற்கு முன்வரவேண்டும். குளிரூட்டி, நவீன சாதனங்கள் வழங்குவது என்பது ஒரு பக்கம் இருக்க, அடிப்படை விடயமான கல்வியில் நாம் கரிசனை கொள்ள வேண்டும்.

இலவச பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்காக அரசாங்கம் திண்டாடும்போது அடிப்படை கல்விக்கான புத்தகங்கள், கொப்பிகளை வாங்குவதற்கு புலம்பெயர் தேசத்தவர்கள் உதவ வேண்டும் - என்றார்.

யாழ்ப்பாணம், மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய இரதோற்சவப் பெருவிழா நேற்று (22) காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள் – ஐ.சிவசாந்தன்)

யாழில் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதில் பல இடர்பாடுகளை சந்தித்தேன்

வடமாகாண பிரதம செயலாளர் தெரிவிப்பு

(சாவகச்சேரி நிருபர்)

யாழ். மாவட்டத்திலுள்ள கழிவுகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக பல இடர்பாடுகளை சந்தித்திருப்பதாக வடமாகாண பிரதம செயலாளர் சமன் பண்டுலசேன தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரியில் நிறுவப்பட்ட மீள்சுழற்சி மைய திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

நான் யாழ். மாவட்டத்திற்கு கடமைக்கு வந்த போது வீதியின் இருமருங்கும் கழிவுகள் தேங்கிக் காணப்பட்டன. இவற்றையெல்லாம் எப்படி தடுத்து நிறுத்துவதென சிந்தித்திருக்கிறேன். இது தொடர்பாக பல அதிகாரிகளுடன் விவாதம் செய்துள்ளேன். இதனால் தர்க்கங்கள் கூட ஏற்பட்டுள்ளன. ஆனால், சாவகச்சேரியில் பின்லா திட்டம் ஊடாக கழிவுகளை சேகரித்து மீள் சுழற்சிக்கு உட்படுத்தும் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்த வேள்ட் விஷன் நிறுவனம், சாவகச்சேரி நகரசபை தவிசாளர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உள்ளிட்டவர்களுக்கு நன்றி.

நான் இந்த மீள் சுழற்சி மையம் தொடர்பாக வடமாகாண ஆளுநருக்கு தெரியப்படுத்தி அவரை அழைத்துவந்து இங்குள்ள இயந்திரங்கள் உள்ளிட்டவற்றை அவருக்கு காண்பிக்க விரும்புகிறேன்.

வேள்ட்விஷன் சிறந்த வரலாற்றைக்கொண்ட ஓர் நிறுவனம். எனது அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் வேள்ட்விஷன் நிறுவனத்தினர் ஆகியோருடன் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கு கழிவு முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த விரும்புகிறேன். கழிவுகளற்ற யாழ்ப்பாணம் என்ற எனது தூரநோக்கினை முதலாவதாக நடைமுறைப்படுத்திய சாவகச்சேரி நகரசபையினருக்கு எனது நன்றிகள் – என்றார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண ஜனாதிபதி ரணில் இதயசுத்தியுடன் முன்வர வேண்டும்

இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

(எஸ்.கணேசன்)

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பது தொடர்பான பேச்சுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதயசுத்தியுடன் முன்னெடுக்க வேண்டும். இதனை தேர்தல் பிரசாரத்துக்காக அவர் பயன்படுத்தக்கூடாது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். நுவரெலியாவில் நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்கான நடவடிக்கையின் ஓர் அங்கமாக பாடசாலைகளில் இன்று சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. பாடசாலை சிறார்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இதனால் மாணவர்கள் உள ரீதியில் பாதிக்கப்படக்கூடும். எனவே, பொலிஸார் அடிக்கடி பாடசாலைகளுக்குள் நுழைவதை ஏற்கமுடியாது. பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் ஒத்துழைப்புடன் இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும். மாணவர்களுக்கு இடையூறு விளைவிக்கப்படக்கூடாது.

வடக்கு, கிழக்கில் நிலவும் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும். இது தொடர்பான பேச்சுகளை தேர்தலை இலக்கு வைத்து முன்னெடுக்காமல், இதய சுத்தியுடன் முன்னெடுக்க வேண்டும். அனைத்து சமூகத்தினரையும் அரவணைத்துக்கொண்டு இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். தற்போதைய அரசுக்கு மக்கள் ஆணை இல்லை. எனவே, மக்கள் ஆணையுடன் தெரிவாகும் அரசின் கீழ் இப்பிரச்சினையை தீர்த்தால் ஏற்புடையதாக இருக்கும். எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி தயார். ஆனால், ஜனாதிபதி தேர்தலை நடத்துவாரா என்பது சந்தேகமாகவே உள்ளது - என்றார்.

கண்டி கல்வி வலயத்தில் பாடசாலைகளுக்கிடையிலான இருமொழி விவாதப் போட்டியொன்று நேற்று முன்தினம் (21) இடம்பெற்றது. அதன் பரிசளிப்பு நிகழ்வு மத்திய மாகாண ஆளுநர் அலுவலக கேட்போர் கூடத்தில் ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில் இடம்பெற்றது. இறுதிப் போட்டியில் கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி முதலிடத்தையும் கண்டி தர்மராஜ கல்லூரி இரண்டாமிடத்தையும் கண்டி பெண்கள் உயர் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. (கண்டி நிருபர்)

டிக்கோயாவில் நத்தார் விசேட ஒளிவிழா

(மஸ்கெலியா நிருபர்)

'மீட்பரின் துணையால் பொருள் ஆதாரம் பெற்று மீழுவோம்' எனும் தொனிப்பொருளில் டிக்கோயா நுண்கலைக் கல்லூரியில் விசேட நத்தார் ஒளிவிழா நிகழ்வு பாடசாலை அதிபர் மூ.மூவேந்தன் தலைமையில் சர்வசமய பங்களிப்புடன் நேற்றுக் காலை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த ஒளிவிழா நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் வாழ்த்து மடல் அமைத்தல், கொட்டில் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான 'அன்பியம்' என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. மேலும் பாடசாலை மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் மாணவர்களுக்கு பகலுணவும் வழக்கப்பட்டது.

இதேவேளை, டிக்கோயா தமிழ் வித்தியாலய ஆசிரியர் சிவனு மனோகரனுக்கு கொடகே புத்தக சாலையின் தேசிய புத்தக விருது பெற்றமைக்காக பாடசாலை சமூகத்தால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஹட்டன் திருச்சிலுவை ஆலய பங்குத்தந்தை நிவ்மன் பீரிஸ் மற்றும் இஸ்லாமிய, புத்த சமயத்தலைவர்கள் உட்பட ஹட்டன் வலயக் கல்விப் பணிமனை உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

கீழே கிடந்த தங்கப் பொதியை பொலிஸாரிடம் கையளித்த நபர்

(பதுளை, பசறை நிருபர்கள்)

மொனராகலை கல்பெத்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் மொனராகலை சந்தைப் பகுதிக்கு அருகில் தங்கப் பொதியொன்றைக் கண்டெடுத்ததுடன் பொலிஸாரிடமும் ஒப்படைத்துள்ளார். மொனராகலை நகரில் அமைந்துள்ள நிதி நிறுவனமொன்றின் கணக்கியல் பிரிவில் பணிபுரியும் கே.எம்.லக்மால் தயாரத்ன என்பவரே இவ்வாறு ஏழரை இலட்சம் ரூபா பெறுமதியான இரு தங்கச்சங்கிலிகள், மோதிரம் மற்றும் பதக்கங்கள் அடங்கிய தங்கப்பொதியை ஒப்படைத்தவராவார். அவர் நேற்று முன்தினம் (21) பிற்பகல் நிறுவனமொன்றுக்கு தனிப்பட்ட தேவைக்காக சென்று கொண்டிருந்தபோது, நகரின் கடையொன்றுக்கு அருகில் இந்த தங்கப்பொதி கிடந்துள்ளது.

இதனையடுத்து அவர் உடனடியாக மொனராகலை பொலிஸ் தலைமையகத்திற்குச் சென்று பிரதான பொலிஸ் அதிகாரி பி.எஸ்.சி.சஞ்சீவவிடம் தங்க ஆபரணங்களை ஒப்படைத்தார். தற்போதைய காலப்பகுதியில் இவ்வாறு தங்கப் பொதியை நேர்மையாக ஒப்படைத்த கே.எம்.லக்மால் தயாரத்ன செய்த இந்த நற்செயல் முழு சமூகத்திற்கே முன்னுதாரணமாக அமைவதுடன் அவரது இந்த மகத்தான செயலை மனதார பாராட்டுவதாக பிரதான பொலிஸ் அதிகாரி இதன்போது வாழ்த்துகளை தெரிவித்தார். தங்கப்பொதியின் உரிமையாளர் யார் என்பது குறித்த மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

போதைப்பொருள் பாவனையிலிருந்து மாணவர்களை பாதுகாக்க பெற்றோர் விழிப்புடன் இருத்தல் வேண்டும்

மாத்தளை போதைப்பொருள் பொறுப்பதிகாரி புஷ்பகுமார

(உக்குவளை நிருபர்)

மாணவர்களையும் இளைஞர்களையும் போதைப்பொருள் பழக்கத்திலிருந்து பாதுகாப்பது பெற்றோர்களது பொறுப்பு என மாத்தளை பொலிஸ் நிலைய போதைப்பொருள் கண்டறியும் பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

மாத்தளை பொலிஸ் நிலைய போதைப்பொருட்களைக் கண்டறியும் பிரிவும் உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலையும் இணைந்து ஏற்பாடுசெய்த போதைப்பொருள் பற்றிய பெற்றோரைத் தெளிவூட்டும் நிகழ்வு இப்பாடசாலையில் நடத்தப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

தற்போது என்றுமில்லாதவாறு போதைப்பொருள் பாவனை இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் அதிகரித்துச் செல்கிறது. இதனைக் கண்டறிந்து தடுக்கவேண்டிய பொறுப்பு எமக்குள்ளது. இதற்காக அரசுக்கு அதிக நிதி செலவாகின்றது. தற்போது நம் நாட்டுக்கு ஐஸ் உட்பட மேலும் சில போதைப்பொருட்கள் எடுத்துவரப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. குறிப்பாக பாடசாலைகளில் மாணவர்களினூடாகவே மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும் மோசமான நிலையையும் காணமுடிகிறது.

இந்நிலையில் நாமும் இராணுவத்தினரும் இதனைக் கட்டுப்படுத்த பாரிய பணிகளை மேற்கொண்டுள்ளோம். எமக்கும் பிள்ளைகள் இருக்கின்றனர். நம் பிள்ளைகள் மீது அளவில்லா அன்பு கொண்டுள்ளோம். எனவே நம் பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக அமையவேண்டுமென்பதில் அனைவரும் கரிசனை கொண்டுள்ளோம். எனவே பெற்றோர் தம் பிள்ளைகளை போதைப்பொருள் பாவனையிலிருந்து பாதுகாத்துக்கொள்வது அவர்களது பொறுப்பாகும்.

எமது நாட்டில் சகலதுறைகளிலும் படித்த ஆளுமைமிக்கவர்கள் தேவைப்படும் இன்றைய நிலையில் அவர்களது எதிர்காலம் போதைப்பொருட்களால் வீணாகிவிடக்கூடாது. இதனைக் கருத்திற்கொண்டு எமது இளைஞர்களும் மாணவர்களும் சிறப்பாகக் கற்று நாட்டுக்கும் பாடசாலைக்கும் நற்பெயரைப் பெற்றுத்தரும் வகையில் தமது கல்வியை சிறப்பாக அமைத்துக்கொள்வது அவசியமாகும். அதற்கும் பெற்றோர் சிறந்த வழிகாட்டிகளாக செயற்படவேண்டும் என்றார்.

அடுத்தவரிடம் கையேந்தும் நிலையை முற்றாக இல்லாதொழிக்க வேண்டும்

சமூகச் செயற்பாட்டாளர் தேசமான்ய சந்திரவதனா ரட்ணராஜா

சமூக செயற்பாட்டாளர் தேசமான்ய சந்திரவதனா ரட்ணராஜா சமூகப் பணிகளின் மூலம் கண்டியில் மிகவும் காத்திரமான பங்களிப்பை ஆற்றி வருகின்ற ஒரு பெண்மணி. பலகொல்ல நடராஜ சர்மாவின் புத்திரர் ரட்ணராஜ குருக்களின் மனைவி. சந்திரவதனா ரட்ணராஜா இந்தியாவில் நடைபெற்ற இந்து சமய மாநாடுகளிலும் கலந்துகொண்டவர். இவர் தன்னுடைய சமூகப் பணிகளுக்காக பல்வேறு பாராட்டுகளையும் விருதுகளையும் பெற்றவர்.

இவர் 'தமிழன்' நாளிதழுக்கு வழங்கிய செவ்வியில் பகிர்ந்துகொண்ட கருத்துகள் பின்வருமாறு:-

உங்கள் குடும்பம் பற்றிக் கூறுவீர்களா?

எங்கள் குடும்பத்தில் நான் உட்பட மொத்தம் 10 பேர். நான் மஸ்கெலியாவில் பிறந்தேன். அப்பா ஒரு தோட்ட அதிகாரி. அவர் பெயர் குகதாச சர்மா. அவர் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைச் சேர்ந்தவர். அவர் பரமேஸ்வராக் கல்லூரியில் கற்றவர். அம்மா சுழிபுரம். அவர் பெயர் நாகேஸ்வரியம்மா. அவர் யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியில் ஆசிரியையாக கடமையாற்றியவர். அப்பாவின் அம்மாவும் யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியில் ஆசிரியையாக கடமையாற்றியவர்.

உங்கள் கல்வி பற்றி கூறுவீர்களா?

நான் ஆரம்பக் கல்வியை புனித சென். ஜோசப் கல்லூரியில் கற்றேன். இங்கு படிக்கும்போது இரட்டை வகுப்பேற்றம் (Double promotion) செய்யப்பட்டு படித்து வந்தேன். பின்னர் ஐந்தாம் ஆண்டுடன் யாழ்ப்பாணம் மகளிர் கல்லூரிக்குச் சென்றேன். அங்கு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த பின்பு தொடர்ந்து க.பொ.த. உயர் தர வகுப்பின் ஆரம்ப காலகட்டம் மாத்திரம் கற்றேன். அதன் பின்பு ஹட்டன் ஜலன்ட் கல்லூரிக்கு க.பொ.த. உயர்தரம் கற்பதற்காக வருகை தந்தேன். நாட்டில் ஏற்பட்ட 1983 ஜூலைக் கலவரத்தின் காரணமாக மீண்டும் யாழ்ப்பாணம் மகளிர் கல்லூரிக்குச் சென்றேன். அதன் பின்பு ஹட்டன் லக்ஸபான குரூப் தோட்டப்புறப் பாடசாலையில் தொண்டர் ஆசிரியையாகக் கடமையாற்றினேன்.

உங்கள் திருமணம் குறித்து..?

1987இல் எனக்கு திருமணம் இடம்பெற்றது. கணவர் பெயர் ரட்ணராஜ குருக்கள். அவர் தந்தையின் பெயர் நடராஜ சர்மா. அவர் அப்பொழுது கண்டி ஸ்ரீ கதிரேசன் கோயிலின் பிரதான குருக்களாக இருந்தார். அது மட்டுமல்ல, கண்டியில் தலதா மாளிகையின் பெரஹெரா காலகட்டத்தில் கண்டி ஸ்ரீ கதிரேசன் கோயிலில் இருந்து கலந்துகொள்ளும் பிரதான குருக்களாக இருந்தார். திருமணம் முடித்து ஒரு வருடம் ஸ்ரீ கதிரேசன் கோயிலில் இருந்தேன். அதன் பின்பு நுவரெலியாவிலுள்ள காயத்திரி அம்மன் கோயிலுக்குச் சென்று விட்டோம். அங்கு பத்து வருடம் இருந்தோம். கணவருக்கு துணையாக இருந்து சமய நடவடிக்கைகளிலும் அதிகம் ஈடுபாடு காட்டி வந்தேன். அங்கு காயத்திரி ஆசிரமும் இருக்கிறது.

எனக்கு மூன்று பிள்ளைகள். மகள்மார் இரண்டு, மகன் ஒன்று. மூத்த மகள் 1988இல் பிறந்தவர். அவர் பெயர் காயத்திரி. மருமகன் பானுகோபன் பொறியியலாளர். இவர்கள் கனடாவில் வசிக்கின்றனர். இவர் என் கணவரின் தங்கையின் மகன். அடுத்த மகள் யாழினி. மருமகன் சத்தியசூரியா. இவர்கள் ஜேர்மனியில் வசிக்கின்றனர். மூன்றாவதாக பிறந்தவர் மகன். அவர் பெயர் ஹரிகரன். மருமகள் கஜலட்சுமி. மகன் வங்கியில் கடமையாற்றியவர். தற்போது தன் தந்தையுடன் சமயப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்.

பத்து வருடங்கள் காயத்திரி கோயிலில் பணிபுரிந்தோம். பின்னர் பிள்ளைகளின் படிப்பு நோக்கத்திற்காக கண்டி பலகொல்ல என்ற இடத்திற்கு வந்தோம். பலகொல்ல முத்துமாரியம்மன் கோயில் என் கணவரின் தந்தையுடையது. கணவர் தன் தந்தையுடன் இணைந்து அங்கு சில காலம் சமயப் பணிகள் புரிந்தார். அதன் பின்பு அவர் திகன காளி கோயிலின் பிரதான குருக்களாக இருந்து சமயப்பணியாற்றி வருகிறார்.

நீங்கள் கலை, கலாசார விடயங்களில் ஆர்வமிக்கவராக இருப்பதற்கான காரணமென்ன?

நான் பாடசாலையில் கல்வி பயிலும்போது கலையின் மீது அதிக ஆர்வம் காணப்பட்டது. அந்த நாள் நினைவுகள் பசுமையானவை. கலை, இலக்கிய நாட்டம் கொண்டு காலடியெடுத்து வைத்த காலம் பாடசாலைப் பருவ காலம். அக்காலகட்டத்தில் கலை, நடனத்துறையில் ஈடுபடுபவர்களைப் பற்றி சிலாகித்துப் பேசிக் கொள்வோம். அதிலும் கலந்துகொண்டு அவை பற்றிப் பேசி நண்பிகளுடன் பெருமைப்பட்டுக் கொள்வேன். அதனால்தான் இரு மகள்மாரையும் பரத நாட்டிய நடனக் கலைஞர்களாக உருவாக்க முடிந்தது. இந்த நடனக் கலையை ஆரம்பத்தில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் வி. இராதாகிருஷ்ணனின் துணைவியாரும் நடன ஆசிரியருமான நந்தினியிடம்தான் இரு மகள்மார்களும் நடனக் கலையைக் கற்றுக் கொண்டனர். பின்னர் கண்டிக்கு இடம்பெயர்ந்து வந்த பின்பும் நடனக் கலையை பிள்ளைகள் தொடர்ந்து படிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தேன். நடன ஆசிரியை வசந்தகுமாரி சூரியகுமாரனிடம் சேர்த்து விட்டேன். அங்கு தொடர்ந்து கற்று கண்டி இந்து கலாசார நிலையத்தில் பெரியளவில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. அதன் பின்னர் குறித்த நடன ஆசிரியை லண்டன் சென்றுவிட்டார். பிள்ளைகளுடைய நடனப் பயிற்சியை தொடர்ந்து பெற்றுக் கொள்வதற்காக நடன ஆசிரியை உமா ஸ்ரீதரனிடம் சென்று கற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தேன். இரு பிள்ளைகளுடைய நடனங்களும் தேசிய ரூபவாஹினிக் கூட்டுத்தாபன தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பப்பட்டன. அவை மட்டுமல்ல, இரு மகள்மாரும் மகனும் சங்கீதம், வினை மற்றும் வாத்திய இசைக் கருவிகளை திறம்படக் கற்றுக் கொண்டனர். அருந்ததி ஸ்ரீரங்கநாதன், கலைவாணி, வரதா ஆகிய ஆசிரியைகளும் கற்றுக் கொடுத்தனர். மகன் கூட பரத நாட்டியம் கற்றுள்ளார். ஆனால், அரங்கேற்றம் மட்டும் செய்யவில்லை என்று குறிப்பிடலாம்.

இக்காலகட்டத்தில்தான் மலையக கலை, கலாசார சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் ராஜ ஜேகின்ஸின் அறிமுகம் கிடைத்தது. அவரது மகள் நிதர்சனி என் மகளின் தோழியாவார். அன்று தொடக்கம் இன்றுவரை ராஜா ஜேகின்ஸ் முன்னெடுக்கும் அனைத்து கலை கலாசார நடவடிக்கைகளுக்கும் அதன் சகல மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கும் பங்குதாரராக இருந்து வருகின்றேன்.

கலை, இலக்கியம், ஊடகம், சமூகம் சார்ந்த அனைத்து தரப்பினரையும் வாழும் போது வாழ்த்தப்பட வேண்டும் என்ற கோட்பாட்டுக்கிணங்க மலையக கலை, கலாசார சங்கம் பாராட்டி பட்டம் வழங்கி கௌரவித்து வரும் ஓர் அமைப்பு. இந்த அமைப்பின் ஒரு முக்கியஸ்தராகவும் அதற்கு உரமூட்டுபவராகவும் இருப்பதில் நான் மிக்க பெருமையடைகின்றேன்.

நீங்கள் சமூகப் பணிகளில் ஈடுபடுவதற்கு தூண்டுகோலாக இருந்தவர்கள் பற்றிக் கூறுவீர்களா?

சமூக சேவையைப் பொறுத்தவரை வறுமையினால் துன்பப்படும் மக்களுக்கு ஏதாவது கையில் இருப்பதைக் கொடுத்து உதவவேண்டும் என்பது பற்றி சிந்திப்பவர்கள் தொடர்ந்து மென்மேலும் அடுத்தவர்களிடம் கையேந்தி நிற்கும் நிலைமையை முற்றாக இல்லாமல் செய்ய வேண்டும் என்பதில் கணிசமானளவு சமூகப் பணியாளர்கள் கவனத்தில் கொள்வதில்லை. ஒருவருக்கு உதவி செய்தால், திரும்பத் திரும்ப அந்த உதவி செய்வதை தவிர்த்து, இல்லாத மற்றுமொரு நபருக்கு உதவி செய்ய வேண்டிய பொறுப்புடையவர்களாக சமூகப் பணியாளர்கள் மாறுதல் பெற வேண்டும். உதவி பெறுபவர்கள் காலம் பூராவும் இரந்துண்டு வாழும் நிலை உருவாவதற்கு இடம்கொடுக்கக் கூடாது.

எவ்வாறாயினும் நான் குறித்த சிந்தனையோடு கண்டி மாவட்டத்தில் கல்வி மேம்பாட்டுக்காக பல தரப்பட்ட சமூகப் பங்களிப்புகளைச் செய்து வருகிறேன். இந்த சமூகப் பணிகளுக்கு எனக்கு முதன்முதலில் தூண்டுதலாக இருந்தவர் என்னுடைய தந்தை ஆவார். நாங்கள் சிறிய வயது காலத்தில் தந்தையிடம் பாடசாலையின் கல்வி மேம்பாட்டுக்காக பலர் வந்து உதவி கோருவார்கள். என்னுடைய தந்தை பாடசாலையின் கல்வி விடயத்திற்கு மாத்திரமல்ல, வேறு என்ன தேவைகள் என்றாலும் யார் எவர் வந்து உதவி கேட்டாலும் இல்லையென்று சொல்லாமல் உடனடியாக உதவி செய்வார். அவர் செய்த புண்ணிய காரியங்களை நாங்கள் வீட்டில் சிறிய வயதில் இருந்து கற்றுக் கொண்டோம். அந்த அடிப்படையில் இன்று கண்டியில் பரந்த மட்டத்தில் பல சமூகப் பணிகளை தனிப்பட்ட ரீதியாகச் செய்து வருகின்றேன்.

குறிப்பாக பல்லேகலை விவேகானந்தா தமிழ் வித்தியாலயம், பல்லேகலை வாணி வித்தியாலயம், ரஜவெல தமிழ் தேசிய பாடசாலை, கண்டி விவேகானந்த பாடசாலை, கண்டி ஹிந்து சீனியர் பாடசாலை, பேராதனை கலைமகள் பாடசாலை மற்றும் நாவலப்பிட்டி, தலாத்ஓய உள்ளிட்ட கண்டியிலுள்ள பல பாடசாலைகளுக்கு அவர்களுடைய கோரிக்கைகளுக்கு ஏற்ப தேவைகளை நிறைவேற்றி வருகின்றேன். ஒவ்வொரு வருடமும் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவச் செல்வங்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வருகின்றேன்.

இத்தகைய என்னுடைய பணிகளைப் பார்த்து எனது தந்தை மிகுந்த மகிழ்ச்சியடைவார். அவரும் இரக்க மனம் படைத்தவர். அடுத்தவர்களுக்கு அள்ளிக் கொடுக்க வேண்டும் என்ற சிந்தனையுடையவர்.

அதேவேளையில் என் கணவரும் கோயிலுக்கு யார் வந்து உதவி கேட்டாலும் மறைமுகமாக நிறைய உதவி செய்து வருபவர். அவர் என்னிடம் சொல்லமாட்டார். அவர் பிள்ளைகளின் படிப்புக்காக நிறைய உதவி செய்து வருகிறார். நான் எந்த வகை உதவிகளைக் கொண்டு சென்று கேட்டாலும் அவர் மறுக்காமல் அதற்கான உதவியை மிக நீண்ட காலமாக செய்து வருகிறார்.

கொரோனாக் காலம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும்போது அல்லது அன்றாடம் நிலவும் தேவையைக் கருத்தில் கொண்டு பல்வேறுபட்ட உதவிகளை மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் செய்து வருகின்றேன்.

இத்தகைய சமூகம், கலை சார்ந்த பணிகளுக்காக கிடைத்த விருதுகள் குறித்துக் கூறுவீர்களா?

2008இல் தினக்குரல் கண்டிக்கிளை அலுவலம், 2010இல் அகில இலங்கை நல்லூறவு ஒன்றியம், 2015இல் மனோகரம்மா ஞாபகார்த்த விருது, 2016இல் இரத்தின தீப விருது, 2020இல் மலையக கலை கலாசார சங்கத்தின் 17ஆவது ஆண்டு நிறைவு விருது, 2018இல் மகாத்மா காந்தி விருது, 2016இல் அறிஞர் சித்திலெப்பை விருது, 2018இல் நடிகர் காமினி பொன்சேகா விருது, 2012இல் ஆறுமுகநாவலர் விருது, 2009இல் ஹிந்து இளைஞர் மன்ற விருது, 2003இல் கண்டி கலாஞ்சலி பாரதிய நாட்டிய கலாகேந்திர நிலையத்தின் விருது, 2010இல் கண்டி கலாஞ்சலி பாரதிய நாட்டிய கலாகேந்திர நிலைய விருது, 2013இல் இரத்தின தீப விருது, 2013இல் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஞாபகார்த்த விருது, 2017இல் நகைச்சுவை நடிகர் சந்திரபாபு விருது, 2012இல் அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் விருது, ஆகிய விருதுகள் கிடைத்ததுடன், 2009இல் அகில இலங்கை சமாதான நீதவானாகவும் நியமிக்கப்பட்டேன். 2010இல் சமூகச் சேவையைக் கருத்திற்கொண்டு தபால் திணைக்களத்தின் மூலம் விசேடமாக தபால் காகித உறை வெளிக்கொணரப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இவை உள்ளிட்ட இன்னும் பல விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்றுக் கொள்ளக் கிடைத்தமையிட்டு நான் பெருமிதம் அடைகின்றேன்.

நேர்காணல்:- இக்பால் அலி

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk
thamilanbusiness@gmail.com

SLIM Brand Excellence விருதுகளில் 2 தங்கங்களை வென்ற அலரிக்ஸ் ஜஸ்கிறீம்

அலரிக்ஸ் ஜஸ்கிறீம் SLIM Brand Excellence விருதுகள் நிகழ்வில் ஆண்டின் மிகச் சிறந்த திருப்புமுனை வர்த்தக நாமம் (Best Turn around Brand of the year) மற்றும் ஆண்டின் மிகச் சிறந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறை உள்ளூர் வர்த்தக நாமம் (SME Local Brand of the Year) ஆகிய இரண்டு தங்க விருதுகளை வென்றுள்ளது. ஒரு வர்த்தக நாமம் மற்றும் தயாரிப்பு புதுப்பித்தலுக்குப் பிறகு, கட்டுமதியான விலையில் கிடைக்கின்ற ஜஸ்கிறீம்களின் புதுமையான தயாரிப்பு வரிசையைக் காண்பிப்பதில் அவர்கள் அனைவரினதும் கவனத்தை ஈர்த்தனர். பொருளாதாரம் மற்றும் வழங்கல் அழுத்தங்களில் இருந்து தப்பிப் பிழைப்பதற்கு போராடிக்கொண்டிருந்த வணிகத்தை புதுப்பிப்பதில் இது பல சவால்களை எதிர்கொண்டது. குறிப்பாக, தொற்றுநோய் நிலைமையின்போது உறைந்த தின்பண்டங்கள் நுகர்ப்பாலால் இருந்த ஒரு காலகட்டத்தில், ஏங்க வைக்கும் தயாரிப்பு மற்றும் வெற்றிகரமான சந்தைப்படுத்தல் உத்தியின் மூலம் இதயங்களை வெல்ல அலரிக்ஸால் முடிந்தது.

BOI உடன் தொடர்ந்தும் முதலீடு செய்கிறது எயார்டெல்

நாட்டின் மிக வேகமாக வளர்ந்து வரும் தொலைத்தொடர்பு நிறுவனமான Airtel SriLanka, இலங்கை முதலீட்டுச் சபையுடன் (BOI) மற்றொரு முக்கிய ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் வெளிநாட்டு நாணய முதலீடுகளை தேசிய தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், வலைப்பின்னல்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைப்புகளின் விரிவாக்கத்தை மேம்படுத்துவதற்கும் முக்கியத்துவம் அளிக்கிறது.

அதன்படி, அடுத்த இரண்டு ஆண்டுகளில், எயார்டெல் தனது அண்மைய கால முதலீடுகளை அதன் வலைப்பின்னல் விஸ்தரிப்பு மேம்பாடுகளை நோக்கி மேற்கொண்டதுடன், மேலும் குறிப்பிடத்தக்க மென்பொருள் மேம்படுத்தல்களை அறிமுகப்படுத்தி, நாடு முழுவதும் 2G மற்றும் 4G சேவைகளை வலுப்படுத்தியுள்ளது.

புதிய TVS தொழிற்சாலைக்கு இந்திய உயர்ஸ்தானிகர் விஜயம்

அண்மையில் முதலாவது வருடப் பூர்த்தியைக் கொண்டாடிய ஹொரண வாகனங்களைப் பொருத்தும் TVS தொழிற்சாலைக்கு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே விஜயம் செய்தார். இந்த விஜயத்தின் போது இந்தியாவில் விசேட பயிற்சி பெற்ற முகாமையாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுடன் கலந்துரையாடினார்.

இக்கட்டான சூழ்நிலையில் இலங்கையின் பொருளாதாரத்துக்கு TVS குறிப்பிடத்தக்க வகையில் செலுத்திவரும் பங்களிப்பை கோபால் பாக்லே பாராட்டினார். தற்போதைய நெருக்கடி சூழலைக் கையாள்வதற்கும், இலங்கையின் பொருளாதாரத்தை புத்துயிர் பெறச் செய்வதற்கும் ஏனைய இந்திய நிறுவனங்களும் TVS இன் இந்த வழியைப் பின்பற்றும் என்ற எதிர்பார்ப்பையும் அவர் வெளியிட்டார். திறன் மற்றும் வளங்களின் அடிப்படையில் இலங்கை இளைஞர்களுக்கு வழங்கப் பல்வேறு விடயங்கள் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

Ceylon Tenny Tea நிறுவனத்துக்கு NCE வெள்ளிப் பதக்க விருது

இலங்கையின் அடையாளத்தை உலக அரங்குக்கு கொண்டு செல்லும், உள்நாட்டுத் தேயிலை விற்பனையில் முதன்மை நிறுவனமாக விளங்கும் Ceylon Tenny Tea தனியார் நிறுவனம், தேசிய ஏற்றுமதிச் சபையினால் (NCE) ஏற்பாடு செய்யப்பட்ட ஏற்றுமதி உயர் விருதுகள் – 2022 விருது வழங்கும் விழாவில் மத்திய அளவிலான பிரிவின் தேயிலை மற்றும் தேயிலை சார்ந்த உற்பத்தி பிரிவின் வெள்ளிப் பதக்க விருதை வென்றுள்ளது. கொழும்பு ஷங்ரி-லா ஹோட்டலில் வெகு விமரிசையாக நடைபெற்ற மேற்படி விருது விழாவில் Ceylon Tenny Tea நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் எச்.டீ.ரீ.ஜோர்ஜ்க்கு மேற்படி வெள்ளிப் பதக்க விருது வழங்கப்பட்டது. Ceylon Tenny Tea நிறுவனம் The Best Flavoured Tea of the Year சர்வதேச விருது உள்ளிட்ட ஏராளமான விருதுகளையும் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பால் பொருட்களை உற்பத்தி செய்து அந்நிய செலாவணியை சேமிக்கும் Pelwatte Diary

கடினமான காலங்களில் விவசாயிகளின் வாழ்க்கைக்கு உதவுவதற்கான திட்டம்





பல்வேறு வகையான பால் பொருட்களை உற்பத்தி செய்து, பெறுமதியான அந்நிய செலாவணியை நாட்டுக்காக சேமிக்கும் இலங்கையின் முன்னணி உள்ளூர் பால் வர்த்தக நாமமான Pelwatte Dairy (பெல்வத்தை பால் பண்ணை), விவசாயிகளின் நலனில் முன்னணியில் நின்று செயற்படும் நிறுவனமாக உள்ளது. குறிப்பாக விவசாயிகள் தற்போது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளை கருத்தில் கொண்டு, விவசாயிகளின் சமூக ரீதியான தளத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும், அதனை மேம்படுத்துவதற்குமாக மேற்கொண்டு வரும் முயற்சிகளில், பெல்வத்தையானது விவசாயிகளின் பல்வேறு வகையான கும்பல் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான ஒத்துழைப்பை வழங்கும் நோக்கில் ஒரு புத்தாக்கமான செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளது.

பெல்வத்தை முகாமைத்துவப் பணிப்பாளர் விக்கிரமநாயக்க மேலும் கருத்து வெளியிடுகையில், ''இலங்கையின் பால் பண்ணை விவசாய சமூகத்திற்கு பல்வேறு வழிகளில் உதவுகின்ற, தேசிய பால் உற்பத்தித் திட்டத்தில் அங்கம் வகிப்பதற்காக எமக்கு கிடைத்த வாய்ப்பு தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்'' என்றார்.

Pelwatte Dairy ஆனது, இலங்கையிலுள்ள முன்னணி உள்ளூர் பால் வர்த்தக நாமங்களில் ஒன்றாகும். இது பல்வேறு வகையான பால் பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம், பெறுமதியான அந்நிய செலாவணியை நாட்டிற்காக சேமிக்கிறது.

உள்ளூர் பால் பண்ணையாளர்களை மேம்படுத்துவதில் எப்போதும் நம்பிக்கை கொண்டுள்ள பெல்வத்தை நிறுவனம், கொவிட்-19 மற்றும் பொருளாதார நெருக்கடியின்போது நாடு எதிர்கொண்ட இன்னல்களுக்கு மத்தியிலும் இடைவிடாமல் தொடர்ச்சியாக அவர்களுக்கு ஆதரவளித்து வந்துள்ளது. ஒரு நம்பகமான உள்ளூர் பால் பொருள் உற்பத்தியாளர் எனும் வகையில், பெல்வத்தை தனது தயாரிப்பின் தரத்தை மிக உயர்ந்ததாகவும், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை விட மிக புத்துணர்ச்சியுடனும் இருப்பதை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துகின்றது.

எப்போதும், பண்ணையின் வாசலில் இருந்து சில்லறை விற்பனை நிலையங்களைச் சென்றடையும் வரை, 48 மணித்தியாலங்களுக்கும் குறைவான நேரத்தை பெல்வத்தை உத்தரவாதமளிக்கிறது. இந்த அம்சத்தை இறக்குமதி செய்யப்பட்ட வர்த்தக நாமங்களில் கூட பெற முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

10 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு வாடிக்கையாளர் நிறுவனங்களை பாராட்டிய Netsys Solutions

இலங்கையின் முன்னணி கணினி ஒருங்கிணைப்பு நிறுவனங்களின் ஒன்றான வரையறுக்கப்பட்ட Netsys Solutions தனியார் நிறுவனம் 10 ஆண்டுகளாக தம்முடன் கொடுக்கல் வாங்கல் செய்த நிறுவனங்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்காக Monarch Imperial ஹோட்டலில் சமீபத்தில் NETSYS KRITAJNA என பெயரிப்பட்ட மாபெரும் நிகழ்வொன்றை நடத்தியுள்ளது. உலகின் முன்னணி வலையமைப்பு தொழில்நுட்ப நிறுவனமான Cisco Systems உடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் 50 நிறுவனங்களைச் சேர்ந்த 150 இற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இங்கு கருத்து தெரிவித்த Netsys Solutions நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி துசித்த அல்விஸ், 10 ஆண்டு காலமாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறையில் தடம் பதிப்பதற்கு உறுதுணையாக நின்ற நிறுவனத்தின் வாடிக்கையாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும் தமது எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக அறிவூட்டுவதற்காகவும் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்ததாக குறிப்பிட்டார். 2012ஆம் ஆண்டில் Netsys Solutions நிறுவனம் கட்டமைக்கப்பட்ட கேபிளிங் தீர்வுகளில் கவனம் செலுத்தும் நிறுவனமாக தொடங்கப்பட்டு குறுகிய காலத்துக்குள்ளேயே பல முன்னணி நிறுவனங்களுக்கு நம்பகரமான தீர்வுகளை வழங்கும் நிறுவனமாக வளர்ச்சி கண்டுள்ளது. நட்சத்திர ஹோட்டல்கள், தொலைத்தொடர்பு நிறுவனங்கள், வங்கிகள், அரச நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களுக்கு தமது சேவையை வழங்கி வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வென்றுள்ளது. கட்டமைக்கப்பட்ட கேபிளிங் தீர்வுகள் மற்றும் கணினி வலையமைப்புக்கான சான்றளிக்கப்பட்ட அனுபவமிக்க நிபுணர்கள் குழுவொன்றை Netsys Solutions கொண்டுள்ளது.

வடபகுதி பெண்களை வலுவூட்டும் டேவிட் பீரிஸ் குழுமம்

திறமை மிக்க பெண் தொழிலாளர்களை உருவாக்குவது மற்றும் நாட்டின் பொருளாதாரத்தில் பெண்களின் சுறுசுறுப்பான பங்கேற்பை ஊக்குவிக்கும் நோக்கில் டேவிட் பீரிஸ் குழுமமானது மற்றுமொரு இயந்திரவியல் பயிற்சித் திட்டமொன்றை அண்மையில் யாழ்ப்பாணத்தில் பூர்த்திசெய்தது.

தொழில்நுட்பப் பயிற்சியின் ஊடாகப் பெண்களைப் பலப்படுத்தல் என்ற தலைப்பிலான இந்தத் திட்டத்தைப் பூர்த்திசெய்த பெண்கள், 2022 நவம்பர் 09ஆம் திகதி யாழ்ப்பாணம் நோர்த் கேட் ஹோட்டலில் நடைபெற்ற நிகழ்வில் NVQ (தேசிய தொழிற்பயிற்சி தகுதி) தரம் 01 சான்றிதழைப் பெற்றுக்கொண்டதுடன், அவர்களுக்கு விரிவான கருவிகளைக் கொண்ட தொகுதியொன்றும் வழங்கப்பட்டது. வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 20 பெண்கள் இதில் கலந்துகொண்டனர்.

தொழில் முயற்சியாளர்களுக்கு சலுகை வழங்கி வழிகாட்டல்

இலங்கையின் தனிநபர்கள் மற்றும் வியாபாரங்களின் திறனை ஊக்குவிக்கும் பொறுப்பு வாய்ந்த வங்கியும், அன்புடன் அரவணைக்கும் வங்கியுமான சலுகை வங்கி, தேசிய பொருளாதாரத்தில் பங்களிப்பு வழங்கக்கூடிய துறையாக சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மை ஏற்றுமதியாளர்களை இனங்கண்டுள்ளது.

அந்நிய செலாவணியில் வருமானம் ஈட்டுவது என்பது பொருளாதாரத்தின் தற்போதைய அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக அமைந்துள்ளது. அந்நிய செலாவணி இருப்புகளின் வளர்ச்சியில் வெளிநாட்டுப் பணியாளர்களின் பங்களிப்பு பிரதான பங்களிப்பை வழங்கும் நிலையில், அவ்வாறு அனுப்பப்படும் பணத்தில் வீழ்ச்சி மற்றும் உத்தியோகபூர்வமற்ற சட்டவிரோதமான முறைகளில் வெளிநாடுகளிலிருந்து பணத்தை அனுப்பும் முறைகள் அதிகரித்துள்ள நிலையில், நாட்டின் அந்நிய செலாவணி இருப்பில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், நாட்டின் வருமான மூலங்களிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், ஏற்றுமதியை அதிகரிப்பதனூடாக, இந்த செயன்முறையை வலுப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

மேலும், அதிகளவு தொழில்நுட்ப உள்ளம்சங்களைக் கொண்ட வர்த்தகம் என்பதால், பல சிறிய நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்கு ஒரு தடையாக அமைந்திருக்கக்கூடும் என்பதால், சலுகை வங்கியினால் பரிபூரண ஆலோசனை சேவைகள் வழங்கப்படுகின்றன. வர்த்தக செயன்முறையில் ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுப்பது தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் அவற்றை எதிர்கொள்ளும் வழிமுறைகள் பற்றிய உதவிகளை பெற்றுக் கொள்வதுடன், ஆவணப்படுத்தல் மற்றும் சரியான ஏற்றுமதி சந்தைகளை கையகப்படுத்தல் போன்ற தமது வியாபார செயற்பாடுகளை முன்னெடுக்க அவசியமான வழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றன.

AkzoNobel இன் ஆண்டின் வர்ணம் 2023 அறிமுகம்

முன்னணி பெயிண்ட் மற்றும் மேற்புச்சு வகைகள் நிறுவனமும், இலங்கையில் Dulux பெயிண்ட் வகைகள் உற்பத்தியாளருமான AkzoNobel, ஆண்டின் வர்ணம் 2023: Wild Wonder ஐ அறிமுகம் செய்துள்ளது. வினை பயிர்களின் வர்ணத்தின் பிரகாசம் எம்மை இயற்கையுடன் இணைப்பதாக அமைந்துள்ளதுடன், வலு மற்றும் நேர்த்தித் தன்மையை உருவாக்குவதாக அமைந்துள்ளது.

இன்றைய உலகில் அதரவு, இணைப்பு, ஊக்குவிப்பு மற்றும் சமநிலையை மக்கள் தேடும் நிலையில், இயற்கை உலகில் காணக்கூடிய அதிசயங்களை அவர்கள் நாடுகின்றனர். உள்ளக பெயிண்ட் மற்றும் மேற்புச்சு வர்ண நிபுணத்துவ அணியினாலும், சர்வதேச அலங்கார நிபுணர்களாலும் மேற்கொள்ளப்பட்ட ஆழமான ஆய்வினூடாக, சர்வதேச சமூக, அலங்கார மற்றும் நுகர்வோர் போக்குகளின் மையத்தில் எதிர்பார்ப்பு உள்ளதைக் கண்டறிந்தனர்.

இயல்பாக நாம் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் Wild Wonder எம்முன் தொடர்ச்சி ஏற்படுத்துகின்றது. எம்மை ஊக்குவிப்பது இயற்கையாக அமைந்துள்ளதுடன், எமது வாழ்வினும் இல்லங்களிலும் எம்மை சிறப்பாக உணரச் செய்வதில் இயற்கை முக்கிய பங்காற்றுகின்றது. எனவே, 20 வருடங்களில் முதன்முறையாக, இயற்கையின் அம்சங்களைப் பின்பற்ற எமது முழு வர்ணத் தெரிவுகளும் வலுவூட்டப்பட்டுள்ளன என AkzoNobelஇன் Global Aesthetic Center இன் புத்தாக்க பணிப்பாளர் ஹெலீன வன் ஜெண்ட் தெரிவித்தார்.

நான்கு Dulux அலங்கார பெயிண்ட் வர்ணத் தெரிவுகள் Wild Wonder ஐ அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. (Winter's Silence, 50YY 49/191): Lush Colors (The forest hues), Buzz Colors (Meadow Brights), Raw Colors (Harvest Shades) மற்றும் Row Colors (Seashore Tones). தமது இல்லங்களையும் நகர சூழல்களையும் மாற்றியமைக்கும் நுகர்வோருக்கு, சுவாங்களுக்கு சிறந்த தோற்றத்தை வழங்கக்கூடிய வர்ணத் தெரிவுகளை வழங்குவதாக இவை அமைந்துள்ளன.

இரட்டை SLIM விருதுகளை வென்றுள்ள DSI Tyres

தமது தரமான உற்பத்திகளால் சர்வதேசத்தை வென்ற இலங்கையின் முதன்மையான வாகன சக்கரங்களின் வர்த்தக நாமமான DSI Tyres, அண்மையில் நடைபெற்ற SLIM Brand Excellence 2022 விருது விழாவில் Product Brand of the Year பிரிவின் வெள்ளிப் பதக்க விருதையும் Local Brand of the Year பிரிவின் வெண்கலப் பதக்க விருதையும் வென்று மூன்று தசாப்தங்களுக்கு மேற்பட்ட தமது பெருமையமிகு பயணத்தின் தனித்துவமான தடத்தை பதித்துள்ளது. மேலும், தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் இலங்கையின் முதன்மையான மூன்று வர்த்தக நாமங்களில் ஒன்றாக தமது இத்தை உறுதிப்படுத்திக்கொண்டுள்ளமை DSI Tyres இன் இன்னுமொரு சரித்திர வெற்றியாகும். தமது உற்பத்திகளை நவீன சந்தைப்படுத்தல் உத்திகள் மூலம் உள்நாட்டு, வெளிநாட்டு வாடிக்கையாளர்களிடம் சரியான முறையில் கொண்டு சேர்த்தமையே இந்த வெற்றிக்கு பிரதான காரணமாகும். சுழலுமானதும் நெருக்கடி மிக்கதுமான சூழலிலும் நிலைத்தகு இருப்பை அடிப்படையாகக் கொண்ட சந்தைப்படுத்தல் வழிமுறைகள் ஊடாக வாடிக்கையாளர்களின் மனங்களை கவர்ந்து தமது சந்தைப் பங்கை பெருக்கிக் கொள்வதற்கு DSI Tyres இனால் முடிந்துள்ளது.

இலங்கைக்கு இந்திய தமிழர் வருகையை நினைவுறுத்தும் நிகழ்வு பெப். 26இல்

த.மு.கூ. தலைவர் மனோ கணேசன்



'மலையகம் – 200' என்ற தலைப்பில் இலங்கைக்கு வந்த முதலாம் தலைமுறை இந்திய வம்சாவளி தமிழர்களின் வருகையை நினைவுறுத்தும் நிகழ்வை பெப். 26ஆம் திகதி ஞாயிறன்று தமிழ் முற்போக்கு கூட்டணி நடத்தும். இதில் கலந்துகொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பல்வேறு கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது - என தமிழ் முற்போக்கு கூட்டணி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மனோ எம்.பி. இதுபற்றி மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கை - இந்திய மலையகத் தமிழர் இலங்கைக்கு வந்த 1823ஆம் ஆண்டிலிருந்து கடந்த 200 வருடங்களாக இலங்கையின் தேசிய பொருளாதாரத்துக்கு வழங்கிவரும் பங்களிப்பை ஆராய்வுசெய்து அங்கீகரிக்க, அமைச்சரவைப்பத்திரம் மூலம் இலங்கை அரசு அதிகாரபூர்வமாக தீர்மானித்துள்ளமையை நாம் வரவேற்கின்றோம்.

அதேவேளை, இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் இந்நாட்டில் மிகவும் பின்தங்கிய பிரிவினராக, வறுமை, உணவின்மை, காணியுரிமை இன்மை, வீட்டுரிமை இன்மை, கல்வியுரிமை இன்மை ஆகிய கொடுமைகளை எதிர்கொண்டு, இலங்கை தேசிய தளத்தில் முழுமையான பிரஜைகளாக இல்லாமல், பெருந்தோட்டங்களிலும், தொழில் தேடி மாநகரங்களிலும் வாழ்கிறார்கள்.

இந்த மக்களின் பின்தங்கிய குறை வளர்ச்சியை ஆய்வுசெய்து அவர்கள் இதுவரைகாலமும் இழந்த வளர்ச்சிகளை எட்டிப்பிடிக்கும் நோக்கில், அரசியலமைப்பு ஏற்றுக்கொண்டுள்ள, மீளுறுதி (affirmative action) நடவடிக்கைகளை அரசாங்கம் எதிர்வரும் 200ஆவது ஆண்டுமுதல் முன்னெடுக்க ஆரம்பிக்க வேண்டுமென நாம் அரசாங்கத்தைக் கோருகிறோம்.

சீனாவிடமிருந்து கிடைத்த எரிபொருளை விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு வழங்க தீர்மானம்

சீன அரசாங்கத்திடமிருந்து கிடைத்த எரிபொருளை ஒரு ஹெக்டேயருக்கும் குறைவாக நெற்செய்கை மேற்கொள்ளும் அனைத்து விவசாயிகளுக்கும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கமைய, சீன அரசாங்கத் திடமிருந்து 10.06 மில்லியன் லீற்றர் எரிபொருள் கிடைத்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அந்தத் தொகையில் 6.98 மில்லியன் லீற்றர் எரிபொருள், விவசாயிகளுக்கும் மற்றைய தொகை எரிபொருள், மீனவர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

அந்தந்த மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான நிரப்பு நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது.

பலாலியில் காணாமல்போன கடற்றொழிலாளர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம் பலாலி அன்ரனிபுரம் பகுதியிலிருந்து கடற்றொழிலுக்கு சென்ற நிலையில் காணாமல்போன கடற்றொழிலாளர் மாதகல் கடற்கரை பகுதியில் நேற்று வியாழக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பலாலி அன்ரனிபுரம் பகுதியைச் சேர்ந்த இராயப்பு றொபேட் கெனடி (வயது 54) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் அன்ரனிபுரம் பகுதியிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை தனியாக கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் காணாமல்போயிருந்தார்.

காணாமல்போனவரை மறுநாள் திங்கட்கிழமை சக கடற்றொழிலாளர்கள் தேடிச் சென்ற சமயம் , உயிரிழந்தவரின் படகு கடலில் கவிழ்ந்த நிலையில் காணப்பட்டது. தேடிச் சென்றவர்கள் குறித்த படகை மீட்டு கரை சேர்த்தனர்.

இந்நிலையில், காணாமல்போன கடற்றொழிலாளரின் சடலம் மாதகல் கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது.

டிசம்பர் முதல் 20 நாட்களில் 50 ஆயிரத்துக்கும் அதிக சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருகை

டிசம்பர் மாதத்தின் முதல் 20 நாட்களில் 50,000இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

டிசம்பர் மாதத்தில் வந்த சுற்றுலாப் பயணிகளில் 49 வீதமானவர்கள் ரஷ்யா, இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

டிசம்பர் மாதத்தில் மொத்தம் 50,375 சுற்றுலாப் பயணிகள் ஏற்கனவே இலங்கைக்கு வந்துள்ளனர்.

இந்த மாதம் ரஷ்யா, இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, ஜேர்மனி, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், மாலைதீவுகள் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளிலிருந்து 1000இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு இலங்கைக்கு 6,78,392 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

இந்தியா, இங்கிலாந்து, ரஷ்யா, ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

இதேவேளை, இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் அதிகளவான சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவாகியுள்ளது.

மார்ச் மாதத்தில் 1,06,500 சுற்றுலாப் பயணிகள் வந்தனர், பின்னர் பொருளாதார நெருக்கடி, எதிர்ப்புகள் மற்றும் பாரம்பரிய பயணிகளுக்கு விடுமுறை காலம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்தது.

கடந்த சில மாதங்களாக ஐரோப்பாவில் குளிர்காலம் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மேற்கத்திய நாடுகளிலிருந்து அதிக எண்ணிக்கையிலான வருகையை சுற்றுலா அமைச்சு எதிர்பார்க்கிறது.

2021 டிசம்பரில் 89,000இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்தனர்.

குளிர்கால மாதங்களில் சுற்றுலாப் பயணிகளை குறிப்பாக, ஐரோப்பாவிலிருந்து வரும் பயணிகளை ஈர்க்க பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது.

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள், COVID-19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக மூன்று கடினமான ஆண்டுகளைத் தொடர்ந்து சுற்றுலாத் துறை படிப்படியாக முன்னேறி வருகிறது.

கலைக்குழுவின் சமூகநலப் பணி

கலைக்குழுக்களும் சமூகநலப் பணிகளை மேற்கொள்ள முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டாக புதிய அலை கலை வட்டம் சிறப்பானதொரு நிகழ்வை கடந்த ஞாயிறன்று கொழும்பில் அரங்கேற்றியது.

மாணவ, மாணவியர் 60 பேருக்கு இலவசமாக கற்றல் உபகரணங்களை வழங்கியது.

கொழும்பு-11, ஸ்ரீ கதிரேசன் வீதியில் அமைந்துள்ள கதிரேசன் மணிமண்டபத்தில் கலைஞரும் பத்திரிகையாளருமான ராதாமேத்தா தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த நடராஜா மற்றும் நெதர்லாந்தைச் சேர்ந்த கவிஞர் பசுவூர் கோபி ஆகியோரின் நிதி அனுசரணையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இதில் சிறப்பு நிகழ்வாக மிமிக்ரி போட்டியும் நடைபெற்றது.

இதில் வெற்றியாளர்களாக எஸ்.சுரேன் முதலாம் இடத்தையும், திலகராஜ் இரண்டாம் இடத்தையும், சஞ்ஜீவன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர், ஈஸ்வரலிங்கம், கிங்ஸ்லி, சந்திரன் சிவகுமார் இன்னும் பலர் பாடசாலை மாணவ மாணவிகளுக்கு புத்தகப்பை, பாடசாலை உபகரணங்களை வழங்கினர்,

நிகழ்வுக்கான முழுமையான ஏற்பாடுகளை வட்டத்தின் தலைவர் கலைஞர் ஷண்மு மேற்கொண்டிருந்தார்

போதைவஸ்து பாவனையை தடுக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கை தென்கிழக்குப் பல்கலையில் கைச்சாத்து!

(மாளிகைக்காடு நிருபர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசாரப் பீடத்திற்கும் இலங்கை மது மற்றும் போதைவஸ்து தகவல் நிலையத்திற்கும் (ADIC) இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று அப்பீடத்தின் கேட்போர் கூடத்தில் கைச்சாத்திடப்பட்டது.

குறித்த ஒப்பந்தமானது, "பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் மது, புகையிலை மற்றும் போதைப்பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வையும் அறிவையும் ஊட்டி, பிராந்திய, சமூக பிரச்சினைகளை கையாளச் செய்தல்" எனும் கூட்டு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். இப்புரிந்துணர்வு உடன்படிக்கையினூடான நிகழ்ச்சித்திட்டமானது சமூகவியல் துறை மாணவர்களை வலுவூட்டுவதை அடிப்படையாகக்கொண்டதாக அமைந்திருந்தது.

இந்நிகழ்வின் வரவேற்புரையினை சமூகவியல் துறையின் தலைவர் பேராசிரியர் எஸ்.எம்.ஐயூப் நிகழ்த்தினார். பின்னர் ஒப்பந்தம் தொடர்பான



பின்புலத்தை உணவு மற்றும் ஔடத முன்னாள் பரிசோதகர் எஸ்.தஸ்தகீர் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து, தலைமை உரையை பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் வழங்கினார். பின்னர் இலங்கை மது மற்றும் போதைவஸ்து தகவல் நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புபுது சுமணசேகர சிறப்புரை நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில், சுவதேச அனுபவங்களோடு கூடிய உள்நாட்டில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய போதைவஸ்து பாவனையை தடுப்பதற்கான அணுகுமுறைகள் குறித்த பரந்துபட்ட தனது பார்வையை வெளிப்படுத்தினார். ADICக்கின் சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் ஏ.சி.றஹீம் தனது உரையில் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் முறை பற்றி விளக்கமளித்தார்.

அதனைத் தொடர்ந்து, இந்நிகழ்வின் பிரதம அதிதி தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் உரையாற்றினார். உபவேந்தர் தனது உரையில், மாணவர்கள் வலுவூட்டப்படுவதனூடாக இன்றைய இலங்கைச் சமூகம் எதிர்நோக்கியிருக்கும் போதைவஸ்து பாவனையின் அதிகரிப்பிலிருந்து விடுபடச் செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் என்றும் அதனூடாக நிலைத்து நிற்கக்கூடிய சமூக வலுவூட்டலை ஏற்படுத்த முடியும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், அவர் கருத்து வெளியிடுகையில், இந்த உடன்படிக்கையினூடான நிகழ்ச்சித்திட்டமானது ஏனைய பீடங்களுக்கும் பரவலடையச் செய்யப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

இதன்பின்னர் மாணவர்கள் தங்களது கருத்துகளை தெரிவிப்பதற்கும் கலந்துரையாடலில் ஈடுபடுவதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து, புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

பல்லி விழுந்த பாலைக் குடித்து மயக்கமுற்ற ஐவர் திருமலை வைத்தியசாலையில் சேர்ப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

பாலுக்குள் பல்லி விழுந்து மயக்கமுற்ற நிலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலஸ்தோட்டம் பகுதியிலேயே நேற்று (22) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 01 வயது 04, 05 மற்றும் 09 வயது, 63 வயது உடையவர்கள் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருவதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

வீட்டிலுள்ள பாட்டி பாலை காய்ச்சி சிறுவர்களுக்கும் கொடுத்துவிட்டு தானும் அருந்தியபோது மயக்க நிலை ஏற்பட்டதாகவும் இதனையடுத்து பால் காய்ச்சிய சட்டியைப் பார்த்தபோது அதில் பல்லி விழுந்து கிடந்ததாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த குறித்த ஐவரும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

புலம்பெயர் தொழிலாளர்கள் தொடர்பில் முறையான திட்டத்தை வகுக்க வேண்டுகோள்

(அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை மத்திய நிருபர்கள்)

புலம்பெயர் தொழிலாளர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் பாதுகாப்பதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பின் தலைவர் வீ. பரமசிங்கம் வேண்டுகோள் விடுத்தார்.

அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு அக்கரைப்பற்றில் நேற்று (22) நடத்திய கொவிட்-19இற்கு பிந்திய காலத்தில் புலம்பெயர் தொழிலாளர்களின் சமூக நீதி மற்றும் ஊதியத் திருட்டை நிவர்த்திசெய்வது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், புலம்பெயர் தொழிலாளர்கள் அண்மைக்காலமாக மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். புலம்பெயர் தொழிலாளர்களின் மூலம் எமது நாடு பாரிய அந்நியச் செலாவணியை பெற்றுக்கொள்கிறது. இருந்தபோதிலும் தொழிலாளர்களின் சேமநலன்களில் முதலாளிமாரும் முகவர்களும் எவ்வித கவனமும் செலுத்துவதில்லை.

மாறாக, வெளிநாட்டுக்குச் செல்லும் ஆசையை காட்டி வெளிநாடுகளுக்கு அழைத்துச்சென்று ஒப்பந்தத்தில் கூறிய வேலை, சம்பளம், வேலை நேரம், தங்குமிடங்கள் என எவற்றிலும் கவனம் செலுத்துவதில்லை. முதலாளிமார்களினால் கட்டாயப்படுத்தப்படும் வேலைகளுக்கு ஆளாகி பணிபுரிந்து வருகிறார்கள். இதனை முதலாளிமாரிடம் கேட்டும் எந்தப் பிரயோசனமும் கிடைப்பதில்லை.

எனவே, புலம்பெயர் தொழிலாளர்கள் வெளிநாடுகளில் இழந்த சம்பளம், உயிரிழப்புகள், உடல் ஊனம் என்பனவற்றிற்கு தகுந்த இழப்பீடுகளும் தற்போதைய காலத்தில் தொழிலாளர்கள் சந்தித்துவரும் பிரச்சினைகளுக்கு அரசாங்கமும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், முகவர் நிறுவனங்களும் ஒன்றித்து தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும் - என கூறினார்.

போடியார் புலம்பல்!



மறைமுகமாக எரிக்சொல்ஹெம் மத்தியஸ்தம் செய்யப்போறாராம் எண்டொரு செய்தி உலாவுதெலுவா..? புலிகள் காலத்தில இந்த மனிசன்தானே நேரடியான மத்தியஸ்தம் செய்து ஒண்டுமே புடுங்கல்ல. இப்ப மறைமுகமாக மொக்காடு போட்டு முகத்த மறச்சி மத்தியஸ்தம் செய்யப்போறாராக்கும் மறுகாவும் ஒரு முள்ளிவாய்க்கால் வராம பாத்தா சரிதான்..!

பிரதேச சமுர்த்தி வேலைத்திட்டத்தின் மீளாய்வுக் கூட்டம் மண்முனை மேற்கில்



(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பு மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுர்த்தி வேலைத்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று (22) மண்முனை மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் உதவி பிரதேச செயலாளர் சுபா சதாகரன், பிரதேச செயலக கணக்காளர் சுந்தரலிங்கம், மாவட்ட சமுர்த்தி அலுவலக கணக்காளர் பஸீர், மாவட்ட சமுர்த்தி அலுவலக தலைமையக முகாமையாளர் மனோகிதராஜ் மற்றும் மாவட்ட செயலக சமுர்த்தி முகாமையாளர்கள், பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர்கள், கணக்காய்வாளர்கள் உட்பட களத்தில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

பிரதேச செயலக தலைமை அலுவலகம், வங்கிச் சங்கம், சமுர்த்தி வங்கி மற்றும் 24 கிராமப் பிரிவுகளின் முன்னேற்றம் இங்கு ஆராயப்பட்டது.

இதன்போது பிரதேச செயலகப் பிரிவில்



இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சமுர்த்தி வேலைத்திட்டங்கள், வங்கி முன்னேற்றங்கள், தொடர்பாக களத்தில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் முன்னேற்றங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன், எதிர்கால நடவடிக்கை தொடர்பாக உதவி பிரதேச செயலாளர் மற்றும் சமுர்த்தி பணிபபாளரால் ஆலோசனை வழங்கப்பட்டது.

‘இளைஞர்களின் நம்பிக்கை’ அம்பாறையில் விளையாட்டு விழா

(பெரியநீலாவணை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் சமூக நல்லிணக்கம் மற்றும் வன்முறை தவிர்த்தல் ஆகிய கருப்பொருளில் ‘இளைஞர்களின் நம்பிக்கை’ எனும் தொனிப்பொருளில் இளைஞர்களுக்கான விளையாட்டு விழா அம்பாறை மிகிந்துபுர வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

பல தசாப்தங்களாக அம்பாறை மாவட்டத்தில் இயங்கிவரும் GAFSO சமூக சேவை நிறுவனம் HELVETAS, GCERF ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் நான்கு மதங்களையும் சேர்ந்த 80 இளைஞர், யுவதிகள் இதில் கலந்து கொண்டனர். இதன்போது கிரிக்கெட், பந்து பரிமாற்றம், பலூன் மாற்றுதல், சங்கீத கதிரை, யானைக்கு கண் வைத்தல், கயிறு இழுத்தல் போன்ற பல போட்டிகள் இடம்பெற்றதுடன், சமூக நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் முகமாக நான்கு மத இளைஞர்களும் இணைந்து “நாம் இலங்கையர்” எனும் தலைப்பில் நாடகமொன்றையும் அரங்கேற்றி இருந்தனர்.

நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த ரத்னநாயக்க கலந்து கொண்டதுடன், கேப்சோ நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் அப்துல் ஜப்பார், அரச சார்பற்ற நிறுவனங்களின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஜ.எல்.இர்பான், தேசிய இளைஞர் மன்ற அதிகாரி ஏ.எம்.அமீர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சுரேகா எதிரிசிங்க, நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் ஏ.ஜே.காமில் இம்டாட் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் இன நல்லுறவை மேம்படுத்தும் நோக்கில் இந்த இளைஞர் குழு பல்வேறு சமூக நலன் விடயங்களுக்காக பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

கல்முனை ஸாஹிரா கல்லூரிக்கு தங்கம்

(நூருள் ஹுதா உமர்)

இலங்கை அரச சேவையாளர்களின் விளையாட்டுச் சங்கம் நடத்திய தேசியமட்ட விளையாட்டு விழா தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் கல்முனை ஸாஹிரா கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் எம்.வை.எம்.றகீப் 110 மீற்றர் தடைதாண்டும் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொண்ட அதேவேளை, 4,100 மீற்றர் ஓட்டப்போட்டியில் தங்கப் பதக்கத்தையும், 4,400 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டார்.

அத்தோடு ஸாஹிரா கல்லூரியின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஏ.எம்.ஜப்ரான் 4,100 மீற்றர் ஓட்டப்போட்டி யில் தங்கப் பதக்கத்தையும், 4,400 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டார்,

பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் எம்.எம்.றஜீப் 100 மீற்றர் நீளம் பாய்தல் போட்டியில் பங்குபற்றி நான்காம் இடத்தையும் பெற்றுக்கொண்டார்.

மேலும், கல்வித் திணைக்களத்தின் சார்பாக போட்டியில் கலந்துகொண்ட கல்லூரியின் பழைய மாணவர்களும் விளையாட்டுப் பயிற்று விப்பாளர்களுமான எம்.யூ.ஏ.சம்லி 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலிடத்தையும், ஏ.ஜீ.எம்.மஸ்பூத் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் இரண்டாம் இடத்தையும் பெற்றதோடு, 4,100 மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலிடத்தையும், 4,400 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

அரபிக் கடலில் மெஸ்ஸியின் 100 அடி கட்-அவுட்

கேரளாவைச் சேர்ந்த ரசிகர்கள் ஆழ்கடலில் 100 அடி ஆழத்தில் லியோனல் மெஸ்ஸியின் கட்-அவுட்டை எப்படி வைத்தனர் என்பது குறித்த வீடியோ வெளியாகியுள்ளது.

அரபு நாடான கட்டாரில் நடைபெற்று முடிந்த 22ஆவது உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் பிரான்ஸ் அணியை வீழ்த்திய ஆர்ஜென்டீனா அணித் தலைவர் மெஸ்ஸி தலைமையிலான அணி வெற்றிபெற்றதைத் தொடர்ந்து உலகெங்கிலும் உள்ள ரசிகர்கள் அதை கொண்டாடி தீர்த்து வருகின்றனர். இந்த வெற்றியை உற்சாமாகக் கொண்டாடும் வகையில் ரசிகர்கள் தொடர்ந்து சமூக வலைத்தள பக்கங்களில் புகைப்படங்களையும் வீடியோவையும் பகிர்ந்து வருகின்றனர்.

ஆனால், இறுதிப் போட்டிக்கு முன்னதாகவே கேரளாவைச் சேர்ந்த மெஸ்ஸியின் தீவிர ரசிகர்கள் அவர் மீதான அன்பை வெளிப்படுத்தும் விதமாக, அரபிக்கடலில் ஸ்கூபா டைவ் அடித்து மெஸ்ஸியின் பெரிய கட்-அவுட்டை நீருக்கடியில் வைத்தனர். அந்த வீடியோ அப்போது இணைய மற்றும் சமூக ஊடகங்களில் வைரலாகியது.

இந்நிலையில், கேரளாவைச் சேர்ந்த ரசிகர்கள் ஆழ்கடலில் 100 அடி ஆழத்தில் லியோனல் மெஸ்ஸியின் கட்-அவுட்டை எப்படி வைத்தனர் என்பது குறித்த வீடியோ வெளியாகியுள்ளது. இந்த வீடியோ ரசிகர்கள் மத்தியில் அதிகம் பகிரப்பட்டு இணையம் மற்றும் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

அந்த வீடியோவை முகமது ஸ்வாதிக் என்ற ரசிகர் தனது ட்விட்டரில் வெளியிட்டுள்ளார். இதேபோல், அந்த வீடியோவை லட்சத்தீவு எம்.பி. முகமது பைசல் தனது அதிகாரப்பூர்வ ட்விட்டர் கணக்கில் வெளியிட்டுள்ளார்.

முன்னதாக, முகமது ஸ்வாதிக் ‘உலகக் கிண்ணத்தில் ஆர்ஜென்டீனா அணி இறுதிப் போட்டிக்கு வந்தால் மெஸ்ஸியின் கட்-அவுட்டை கடலில் 100 அடி ஆழத்தில் வைப்பேன் என்று கூறியிருந்தார். அதேபோல், கடந்த செவ்வாய்க்கிழமை குரோஷியாவுக்கு எதிரான முதல் அரையிறுதியில் ஆர்ஜென்டீனா 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற பிறகு, முகமது ஸ்வாதிக் தனது வாக்குறுதியை நிறைவேற்றினார்.

தண்டனையிலிருந்து தப்பிய ஆர்ஜென்ரீன ரசிகைகள்

கட்டாரில் நடந்த உலகக்கிண்ணப் போட்டியில் ஆர்ஜென்ரீனா வெற்றிபெற்ற போது மேலாடையைக் கழற்றி வெற்றியைக் கொண்டாடும்போது மேலாடையின்றி உலகம் முழுவதும் தலைப்புச் செய்திகளை உருவாக்கிய இரண்டு ஆர்ஜென்ரீனா ரசிகர்கள் தாங்கள் பத்திரமாக வீடு வந்து சேர்ந்ததாக தெரிவித்துள்ளனர்.

இப்போது தங்களை ‘மேலாடை இல்லாத பெண்கள்’ என்று குறிப்பிடும் இந்த ஜோடி, கட்டாரில் பெண்கள் வெளிப்படையான அல்லது இறுக்கமான ஆடைகளை அணிய தடை விதிக்கப்பட்ட கடுமையான விதிகளை மீறியதாக குற்றஞ்சாட்டப்பட்டது. பின்னர் இருவரும் இறுதிப் போட்டிக்குப் பிறகு நாட்டுக்கு வெளியே தங்களைக் காட்டும் படங்களை வெளியிட்டனர். ஆர்ஜென்ரீனாவின் குயில்ம்ஸ் நகரத்தைச் சேர்ந்த நோயே, தன் வாழ்க்கையின் பயணத்தை ரசித்ததாகக் கூறி, ஒரு விமான வீட்டில் தன்னைக் காட்டும் செல்ஃபியை வெளியிட்டார்.

ஸ்டேடியத்திற்கு வெளியே நீலம் மற்றும் வெள்ளை நிற ஆர்ஜென்ரீன கொடியை அசைத்துக்கொண்டிருக்கும் பல படங்களையும், மெஸ்ஸி மற்றும் இணை பிரான்ஸுக்கு எதிரான பெனால்டி ஷூட் அவுட் வெற்றியைத் தொடர்ந்து கொண்டாடிய வீடியோவையும் நோயே பகிர்ந்துள்ளார்.

"எப்போதும் செய்திகள் மற்றும் வார்த்தைகளால் எனக்கு ஆதரவளிக்கும்... பெருமை மற்றும் நல்வாழ்துகளை வெளிப்படுத்தும் வகையில்" தனது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு இந்த கொடி "அர்ப்பணிக்கப்பட்டது" என்று நோ கூறினார்.

ஆக்மென்டட் ரியாலிட்டி தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துகிறது லொஸ் ஏஞ்சல்ஸ்

2028 ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க மற்றும் நிறைவு விழாக்களை அரங்கேற்ற லொஸ் ஏஞ்சல்ஸின் SoFi ஸ்டேடியம், புதிய ஆக்மென்டட் ரியாலிட்டி (AR) தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

$5 பில்லியன் (3.6 பில்லியன்/4.4 பில்லியன்) செலவில் கட்டமைக்கப்பட்ட அதிநவீன அரங்கானது, தற்போது லொஸ் ஏஞ்சல்ஸ் ராம்ஸின் இல்லமாக உள்ளது, போட்டிகளின்போது தொழில்நுட்பத்தை வழங்கும் முதல் தேசிய உதைபந்தாட்ட லீக் அணியாக மாறியுள்ளது. .

ARround என அறியப்படும் இந்த அமைப்பு "உலக நிஜ உலக யுசு அனுபவங்களுடன் கேம்டே வேடிக்கையை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட அடுத்த தலைமுறை ரசிகர் நிச்சயதார்த்த தளம்" என்று விவரிக்கப்படுகிறது.

ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் முப்பரிமாண ஸ்பேஷியல் கம்ப்யூட்டிங்கைப் பயன்படுத்தி 70,000 கொள்ளளவுகொண்ட ஸ்டேடியம் முழுவதிலும் தனிப்பட்ட பயனர்களுக்கான உள்ளடக்கத்தை உருவாக்குகிறது.

இந்த தொழில்நுட்பம் பார்வையாளர்களை ஸ்மார்ட் போன் அப்ளிகேஷன் மூலம் இணைக்க உதவுகிறது.

ரசிகர்கள் தங்கள் சொந்த சாதனங்களில் அல்லது இன்ஃபினிட்டி ஸ்கிரீன் எனப்படும் 65,000 சதுர மீற்றர் வீடியோபோர்டில் ஸ்பெஷல் எஃபெக்ட்களை அனிமேட் செய்து பார்க்க முடியும், இது குழு களத்தில் நுழையும் போது மற்றும் டச் டவுன்கள் போன்ற முக்கிய தருணங்களில் மேம்பட்ட உள்ளடக்கத்தை அனுபவிக்க உதவுகிறது.



இந்தியாவுக்குள் நுழைந்த புதிய வகை கொரோனா ‘பி.எவ்.7’

நால்வருக்கு தொற்று உறுதி; முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரம்!

சீனாவின் நிலைமை மிகவும் கவலையளிக்கிறது - உலக சுகாதார அமைப்பு

சீனாவில் அதிக பாதிப்பை ஏற்படுத்திவரும் கொரோனாவின் புதிய உருமாற்றமான பி.எவ்.7 வகை ஓமிக்ரொன் தொற்று இந்தியாவில் 4 பேருக்கு கண்டறியப்பட்டுள்ள நிலையில், இந்தியா முழுவதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

சீனாவில் நாள்தோறும் இலட்சக்கணக்கானோர் பாதிக்கப்படும் நிலையில், அங்குள்ள மருத்துவமனைகள் நோயாளிகளால் நிரம்பி வருகின்றன. கொரோனா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதால் தொற்றுப் பரவல் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே செல்கிறது.

சீனாவின் நிலை கவலையளிக்கிறது

சீனாவில் கொரோனா தொற்றுப் பரவல் அதிகரித்துவரும் நிலையில், அங்குள்ள சூழ்நிலை மிகவும் கவலை அளிப்பதாகவும், சீனாவுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய தயாராக இருப்பதாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த தடுப்பூசி போடுவதில் கவனம் செலுத்துமாறும் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதோனம் கெப்ரயஸ் சீனாவை வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா பாதிப்பு குறித்த விவரங்களைப் பகிர்ந்து ஆய்வுகள் செய்ய சீனாவை தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனாவை தொடர்ந்து பல்வேறு நாடுகளிலும் உருமாறிய கொரோனா தொற்று வேகமாக பரவத் தொடங்கியுள்ளது. ஜப்பானில் ஒரேநாளில் 2 இலட்சத்துக்கும் அதிகமானோருக்கு தொற்று உறுதியான நிலையில், சிகிச்சையிலிருந்த மேலும் 296 பேர் உயிரிழந்துள்ளார். இதேபோல் அமெரிக்காவில் புதிதாக 21 ஆயிரம் பேருக்கும், தென் கொரியாவில் 88,172 பேருக்கும், பிரான்ஸில் 54,613 பேருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது.

சீனாவின் வூஹான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இறுதிப் பகுதியில் கண்டறியப்பட்ட கொவிட்-19 வைரஸ் உலகம் முழுவதுமுள்ள 200இற்கும் மேற்பட்ட நாடுகளை ஆட்கொண்டு பல இலட்சக்கணக்கான உயிர்களைக் காவுகொண்டது.

இப்பெருந்தொற்றின் தாக்கம் கடந்த 6 மாதங்களாக குறைந்திருந்தது. உலக நாடுகள் இயல்புநிலைக்குத் திரும்பி பொருளாதார சரிவை சீர்செய்ய போராடிவரும் நிலையில், மீண்டும் சீனாவில் இருந்தே கொரோனா பரவல் மிரட்டத் தொடங்கியுள்ளது.

சீனாவை தொடர்ந்து தற்போது அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட நாடுகளிலும் கொரோனா பரவல் மீண்டும் தீவிரமடையத் தொடங்கியுள்ளது. ஜப்பானில் ஒரேநாளில் தொற்று பாதிப்புக்குள்ளானோர் எண்ணிக்கை 2 இலட்சத்தைத் தாண்டியுள்ளது. இதனால், உலக நாடுகள் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன.

இந்நிலையில், சீனாவில் அதிவேகமாக கொரோனா பரவியதற்குக் காரணம் எனக் கருதப்படும் ‘ஓமிக்ரொன் பி.எவ்.7’ வைரஸ் இந்தியாவிலும் கண்டறியப்பட்டுள்ளது. குஜராத்தில் இருவருக்கும், ஒடிசாவில் ஒருவருக்கும், அகமதாபாத்தில் ஒருவருக்கும் பி.எவ்.7 தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

‘பிஏ.5’இன் துணை வகையான ‘பிஎவ்7’ தொற்று வேகமாக பரவக்கூடியதாகும். தடுப்பூசி செலுத்தியவர்களுக்கும் நோய்த்தொற்று பாதிப்பை ஏற்படுத்தும் திறன்கொண்டது.

அமெரிக்கா, பிரித்தானியா, பெல்ஜியம், ஜேர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் ஏற்கனவே பரவியிருப்பதாகக் கருதப்படுகிறது.

இந்நிலையில், புதிய வகை கொரோனா பரவலை இந்தியாவில் கட்டுப்படுத்துவது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி நேற்று டில்லியில் உயர்நிலைக் குழுவுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா டில்லியில் உயர்மட்டக் குழு நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தினார். அனைத்து மாநிலங்களிலும் கொரோனா இன்னும் முடிவுக்கு வரவில்லை என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சமரசம் கூடாது என்றும் கொரோனா கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதிகளில் கட்டாயம் முகக்கவசம் அணியவும், தொற்று தடுப்பு நடவடிக்கைகளை பின்பற்றவும் இந்திய மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

உலக செய்திகள்

ரஷ்யாவுடனான போரில் உக்ரைனுக்கு ஆதரவாக நேட்டோ துணை நிற்கும்

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உறுதி

ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு ஆதரவாக நேட்டோ படைகள் துணை நிற்கும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உறுதியளித்துள்ளார்.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. இப்போர் 10 மாதங்களாக தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்தப் போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகள் நிதி உதவியையும், இராணுவத் தளவாடங்களையும் அனுப்பி பக்கபலமாக இருந்து வருகின்றன. இதனால் ரஷ்யாவிடம் பறிகொடுத்த நகரங்களை ஒவ்வொன்றாக உக்ரைன் மீட்டு வருகிறது.

இந்நிலையில், உக்ரைன் ஜனாதிபதி ஸெலன்ஸ்கி, அமெரிக்காவுக்குச் சென்று ஜனாதிபதி ஜோ பைடனை சந்தித்து போர் நிலைவரம் குறித்து ஆலோசனை நடத்தினார். ரஷ்யாவின் படையெடுப்புக்குப் பின்னர் முதல் முறையாக வெளிநாடு சென்றுள்ள ஸெலன்ஸ்கி, ஜோ பைடனையும் சந்தித்து பேசியுள்ளார். இந்தச் சந்திப்பில் உக்ரைனுக்கு கூடுதலாக 15 ஆயிரம் கோடி ரூபா இராணுவ தளவாடங்களை அமெரிக்கா வழங்கியுள்ளது.

இதில் பேரிட்லாட் ஏவுகணைகளுடன் கூடிய பல அடுக்கு வான் தாக்குதல் எதிர்ப்புக் கருவிகளையும் உக்ரைன் பெற்றுக்கொண்டது. அதைத் தொடர்ந்து இருவரும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது பேசிய ஸெலன்ஸ்கி, “நாட்டின் இறையான்மை மற்றும் ஒருமைப்பாட்டில் சமரசம் செய்துகொள்ள மாட்டேன் என திட்டவட்டமாக தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய ஜோ பைடன், ரஷ்யாவுக்கு எதிரான போரில், உக்ரைனை தனித்துவிட மாட்டோம் என்றும் அந்நாட்டுக்கு ஆதரவாக நேட்டோ படைகள் துணை நிற்கும் என்றும் உறுதிபடத் தெரிவித்தார். சுதந்திரம், பாதுகாப்பு மற்றும் வளமான உக்ரைனின் தொலைநோக்குப் பார்வை குறித்து நாங்கள் பகிர்ந்துகொண்டோம். இந்தப் போர் முடிவுக்கு வர வேண்டும் என்று நாங்கள் இருவரும் விரும்புகிறோம். கண்ணியமான முறையில் புட்டின் நடந்துகொண்டால் இது சாத்தியமாகும்” என்று ஜோ பைடன் தெரிவித்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7